ISSN: 2012 - 6352 Reg. No.: 187317


# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

POPE FRANCIS
Sri Lanka 2015

40/=

வருக திருத்தந்தையே வருக!
உம்வரவால் இந்நாட்டில்
இனவாத இருள் விலகி
நல்லிணக்க வாழ்வில்
நம்பிக்கை பிறக்கட்டும்.
மதங்கடந்த மனித நேயம்
கை குலுக்கட்டும்
ஈழத்துப் புனிதரின்
இதய ஆசீருடனும்
மக்கள் ஆணைப்படி எழுந்த
தலைமைத்துவத்துடனும்
புத்தாண்டில் இந்நாட்டில்
புதுவிடியல் புலரட்டும்!



ஜனவரி – 2015

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டன்

**ஜனவரி - 2015**

மலர் - 46 இதழ் - 12


- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்



- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.




## உள்ளே....


அன்புடன் உங்களோடு .................. 01

திருத்தந்தையின் இலங்கை ......... 02

பேராசிரியருக்கு ஒரு பாடம் ......... 03

நடந்து முடிந்த ஜனாதிபதி ............ 07

படைப்புலகம் காட்டும் .................. 09

மனிதம் ..............................................10

புனித நிலைக்கு உயர்த்தப் .......... 12

48வது உலக அமைதி ................. 14

இலக்கிய மஞ்சரி .............................15

மீண்டும் அவரே ............................. 17

தொண்டனின் சில நிமிடங்கள் ..... 21

கடுகுக் கதை ................................... 23

வீட்டு மருத்துவம் ............................ 24

புனிதர்களை அறிவோம் ............... 26

விவிலியம் கற்போம் ..................... 27

அறிவை வளர்ப்போம் .................. 28


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்புடன் உங்களோடு ....

வேற்றுமைகளை வேரோடு களைந்து ஒற்றுமைக்கு உரமிடப் புதிய ஆண்டு நம்மை அழைக்கின்றது. அன்னை மரியாளை ஆழ்ந்து அன்பு செய்தவர்கள் பிரிவதில்லை, பிரிந்தாலும் மரியாள் அவர்களை விடுவதில்லை.

புத்தாண்டு பிறந்துவிட்டது. மற்றுமொரு ஆண்டு மலர்ந்துவிட்டது. இப்புத்தாண்டை இயேசுவின் இனிய நாமத்தில் தொடங்குவோம்!

"தாய் இல்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னைக் காக்கின்றாள்"

இது ஒரு கவிஞனின் தாயைப் பற்றிய பாடல்.

"தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா
அன்புத் தாய் தந்த பிச்சையிலே
வளர்ந்தேனம்மா"

இது இன்னொரு கவிஞனின் தாயைப் பற்றிய பாடல். ஆம், தாய் என்ற சொல் புனித மானது. அது மந்திரமிக்க சொல். இதையே கவிஞன் பாடுகின்றான்.

"தாயிற் சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

தாயின் அன்பிற்கு இந்தக் கவிதைகள் ஈடாகாது. இன்னும் சொல்லப்போனால் தாயின் பாசத்தை எந்தக் கவிதையாலும் வடிக்க முடியாது. காரணம் தாய்ப்பாசம் பேசப்படுவதோ, பாடப்படுவதோ அல்ல. மாறாக, அது அனுபவிக் கப்பட வேண்டிய ஒன்று. ஆம், தாயன்பு தியாகத் தின் வெளிப்பாடு. புனிதத்தின் புதுப்புனல். அது ஒரு வற்றாத ஜீவநதி. தாய் தன் குருதியை அமுதாக்கி குழந்தைக்கு ஊட்டுகின்றாள்.

இன்று புத்தாண்டில் இறைவன் நமக்குக் கொடுத்த மாபெரும் கொடை நம் தாய் அன்னை மரியாள். நாம் அந்தத் தாயை நம் ஒவ்வொருவரின் தாயாகப் போற்றி அவளை ஏற்றுக் கொண்டு, அவள் வழியில் நடக்க வேண்டியது நம்முடைய பணியாகும். 'இவரே உம் தாய்' என்று சொல்லக் கேட்ட அந்தச் சீடர் அன்று மரியாளைத் தன் தாயாக ஏற்றுக்கொண்டதுபோல், நாமும் இன்று அத்தாயை ஏற்றுக் கொள்வோம். இப்புத்தாண்டில் இறைவன் நமக்குக் கொடுத்த கொடை அவளே!

புதிய ஆண்டில் எது எது நம்மைப் பிரிக்குமோ அவற்றை மறப்போம்! எது எது நம்மை இணைக்குமோ அதை மாத்திரமே நினைப்போம்! கடந்தகாலத் தோல்விகளை நினைத்து நிகழ்காலத்தில் புலம்பிக்கொண்டிருந்தால், எதிர்காலம் இருட்டாகவே இருக்கும். தோல்வியே வெற்றியின் படிக்கட்டுகள் என்பதை உணர்ந்து எதையும் தாங்கும் இதயத்தோடு தெளிந்த பார்வை பெறுவோம்! பிறருக்கு ஒளி யாய் இருப்போம்.

"ஓர் இளைஞன் வேலையில்லாக் காரணத்தால் ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்தான். குரங்கு வேசம் புனைந்து இங்கும் அங்கும் தாவித் தாவிக் குதித்தான். ஒருநாள் சிங்கம் இருந்த கூண்டிற்குள் தவறுதலாகக் குதித்துவிட்டான். சிங்கத்தைப் பார்த்துப் பயந்து அலறினான். சிங்கம் கூறியது: "பயப்படாதே, நானும் மனிதன் தான். உன்னைப் போல் சிங்க வேடம் அணிந்து நடிக்கிறேன்" என்று. இப்படி நம்மில் பலர் வேடம் போட்டு பலரை, ஏன் தங்களையே ஏமாற்றிக்கொண்டிருக்கின்றோம். நமது வாழ்வு அசலாக இருக்க வேண்டும்; போலியாக இருக்கக் கூடாது. எமது நாட்டின் நிலமையும் அப்படித்தான். வேடம் போடுபவர்களை மாற்றியமைக்க நாம் முன் வரவேண்டும். புதிய மாற்றத்திற்காக நாம் செயற்படவேண்டும்.

"வேலை கேட்டுப்போனால் இலஞ்சம்
வீட்டிலே இருந்தால் தண்டம்
கடன் கேட்கப் போனால் மண்டம்
ஜோசியரிடம் சென்றால் கண்டம்
தொடங்கினேன் ரசிகர் மன்றம்"

என்று ஏனோ தானோ என்ற வாழ்க்கை வாழாமல், நம் வாழ்வு அலட்சிய வாழ்வு அல்ல, இலட்சிய வாழ்வு. எப்படியும் வாழலாம் என்பதல்ல, இப்படித்தான் வாழவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்போடு வாழவேண்டும்.

தொடர் 16 பக்.

**இறைவாக்கு**


**"காலம் நிறைவேறியபோது நாம் இறைவனின் பிள்ளைகளாகும்படி கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்.'** (கலாத்தியர் 4:4-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருத்தந்தையின் இலங்கை வருகை!

## - ஆயருடன் ஒரு நேர்காணல் -





உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கை நாட்டுக்கு வருவது தொடர்பாகவும், அருளாளர் ஜோசப்வாஸ் அடிகளுக்குப் புனிதர் பட்டம் அளிப்பது தொடர்பாகவும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களைச் சந்தித்து உரையாடினோம். வானொலிக்காக (திருந்தந்தையின் இலங்கை வருகைக்கு முன்) எடுக்கப்பட்ட இந்நேர்முகம் தொண்டனுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**(ம) வணக்கம் ஆயர் அவர்களே! திருத்தந்தை ஒருவரின் இலங்கைக்கான இரண்டாவது வருகை என்ற வகையிலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான முதல் வருகை என்ற வகையிலும் திருத்தந்தையின் இலங்கை வருகைக்கான நோக்கம், அதன் பின்னணி பற்றி விளக்கமாக எங்களுக்குக் கூறுங்கள்...**



கத்தோலிக்க திருச்சபைக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் இரண்டாவது வத்திக்கான் திருப்பேரவை என்பது ஒரு புதுப்புனல் வருகை. ஏனெனில் வத்திக்கான் சங்கம் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் பகிரங்கமாக மறுமலர்ச்சி வாழ்வினைப் பிரகடனம் செய்துள்ளது. இதன்மூலம் அனைவரும் புதிய பார்வையினைப் பெறவேண்டும், புதிய கண்ணோட்டத்தைப் பெறவேண்டும், புதிய மன இயல்பினைப் பெறவேண்டும் என்றெல்லாம் வேண்டுகோள் விடுத்தது. இந்த வத்திக்கான் திருச்சங்கத்தின் அதிகாரப்பூர்வமான கொள்கைகள் - கோட்பாடுகள், பிரகடனங்கள் - பரிந்துரைகள், அறிவிப்புகள் - அழைப்பிதழ்கள், அறைகூவல்கள் எல்லாமே நல்ல - நல்ல, சக்திமிக்க - வீரிய மிக்க ஆன்மீக வித்துகள்.

திருச்சபையில் இத்தகையதோர் மறுமலர்ச்சியை, புதுப்பித்தலை ஏற்படுத்த 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை கூட்ட நினைத்தவர் திருத்தந்தை 23ம் அருளப்பர் (ஜோன்) ஆவார். இவர் 1958 அக்டோபர் 28ம் நாள் 23ம் ஜான் என்ற பெயரில் திருத்தந்தையாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேர்வு செய்யப்பட்டார். உள்ளிருக்கும் இறுக்கமும், புழுக்கமும் வெளியேறி, வெளியில் உள்ள இதமான சூழல் திருச்சபை என்னும் இறையாட்சி ஊடகத்தில் உட்புக 11.10.1962இல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டினார். 11.04.1963 இல் 'அவனியில் அமைதி' என்னும் சுற்றுமடலை உலகிற்கு அளித்தார்.

பொதுச்சங்கத்தில் கலந்துகொண்ட ஒரு கர்தினால், திருத்தந்தை 23ம் அருளப்பரை அணுகி, "பொதுச் சங்கத்தின் நோக்கம் என்ன? ஒரு வார்த்தையில் பதில் கூறுங்கள்" என்று கேட்க, திருத்தந்தை அந்தக் கருதினாலுக்கு அருகில் இருந்த மூடப்பட்டிருந்த ஜன்னல்களைத் திறந்து விட்டார். பின்னர் புன்முறுவல் பூக்கக் கூறினார்.

"இதுதான் இந்தப் பொதுச்சங்கத்தின் நோக்கம். நல்ல காற்று உள்ளே வரட்டும்" ஆம், திருச்சபைக்குள்ளே, புதிய காற்று நன்றாக வீச வழிவகுத்தவர், மறுமலர்ச்சியை, புதுப்பித்தலை அறிமுகப்படுத்தியவர், உறங்கிக்கொண்டிருந்த திருச்சபையை விழித்தெழச் செய்தவர், திருச்சபையிலே பாரியதொரு மாற்றத்துக்கு வித்திட்டவர் 23ம் அருளப்பர் என்றால் மிகையாகாது. அவர் 03.06.1963ல் இறைவனடி சேரும்வரை தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்பது இறைவனின் திருவுளமாக இருந்தது.

23ம் அருளப்பர் தொடங்கிவைத்த மறுமலர்ச்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றவர் ஆறாம் பவுல். 23ம் ஜானின் எண்ண எழுச்சி சிதையா வண்ணம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை தொடர்ந்து நடத்தி 08.12.1965ல் நிறைவுக்குக் கொண்டுவந்தவர். இவரது தொலைநோக்குப் பார்வை பெருமைக்குரியது. இவர் தமது திருத்தூதுப் பயணங்களின் காரணமாக தமது பெயரை ஆறாம் பவுல் என்று அழைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஏனெனில் பவுல் நற்செய்தி அறிவிப்புக்காக பல பயணங்களை மேற்கொண்டார் என திருத்தூதர் பணியும், பவுலின் மடல்களும் சான்று பகர்கின்றன.

**① இவ்வேளையில் இன்னுமொன்றைக் கேட்கவேண்டும் என்று விரும்புகிறேன். முன்பெல்லாம் திருத்தந்தையர்கள் திருப்பயணங்களை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.**

## பேராசிரியருக்கு ஒரு பாடம்



அந்தப் பேராசிரியர் பெரிய அறிவாளி
ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள்
தாராளமாகப் படைத்தவர்
மாநாட்டு மண்டபங்களில்
அவற்றை வாசித்து மகிழ்ந்தவர்
அந்தக் குக்கிராமத்தில்
அவருக்கு வரவேற்பு
செங்கம்பள மரியாதை
அவரது மாணவர்களின் உபயம் அது
கிராமத்தைச் சுற்றிப் பார்த்து
வயல்வெளி பார்க்க வந்தார் அவர்
வயதான விவசாயி
அவருக்கு ஒரு
வேடிக்கைப் பொருளானான்
கேள்விகள் பல கேட்டார்
பதில் சொன்னான் கந்தன்

எந்த மண்ணில் எந்த நெல் விளையும் ......?
எந்தக் காலத்தில் எப்படி விதைப்பது....?
இடர்கள் ஏற்பட்டால் எப்படித் தவிர்ப்பது....?
தரிசு நிலங்களைத் தங்க வயலாக்கிடும்
ரசவாத வித்தை அத்துபடி அந்தக் கந்தனுக்கு.
பேராசிரியர் பிரமித்தார்!
இதுதான் உண்மையான ஆராய்ச்சி
இவன் வயல்கள்தான்
உண்மையான ஆய்வுக் கட்டுரைகள்
இவற்றை வாசித்து மகிழ ஏது மண்டபம்?
பேராசிரியர் பாடம் படித்தார்
ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதை நிறுத்தினார்.

- அருள்மணி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**திருத்தந்தை 6ம் சின்னப்பரோடுதான்இது தொடங்கிய தாகத் தெரிகிறது. ஆக, இந்தத் திருப்பயணங்கள் ஆரம்பமானதற்கான காரணங்கள் என்ன என்று கூற முடியுமா?**

2ம் வத்திக்கான் சங்கத்தின் விரிந்த பார்வை, ஆழ்ந்த பார்வை, தீர்க்கதரிசனப் பார்வை, இறைநோக்குப் பார்வை, திருத்தந்தையரின் உலக நாடுகளுக்கான திருப்பயணங்களுக்கு வித்திட்டது.

திருத்தந்தை ஆறாம் பவுல் 1964ல் இந்தியாவுக்கு வந்து பம்பாயில் நடந்த நற்கருணை மகாநாட்டில் கலந்துகொண்டு, இந்தியாவுக்கு வந்த முதல் திருத்தந்தை என்ற பெருமையையும் பெற்றார். 1970ல் இலங்கைக்கு முதன் முதல் விஜயம் செய்த திருத்தந்தை என்ற பெருமை இவரையே சாரும்!

- 1970 - மார்கழி மாதம் 4ம் திகதி 2 மணிநேர விஜயத்தை மேற்கொண்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மக்களுக்கான கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினார்.
- 1966ல் கீழைத் திருச்சபையில் பிதாப் பிதாவாகிய அத்தனகோரசைச் சந்தித்து வரலாற்றுப் பெருநிகழ்வு எனப் பதிவுசெய்து கொண்டார்.
- இவர் வத்திக்கான் நகரை விட்டு முதன் முதலில் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டவர் என்பதை கருத்தில் கொண்டு 'திருப்பயணத் திருத்தந்தை' என அழைக்கப்பட்டார்.
- 14.09.1965 அனைத்துலக ஆயர் மன்றத்தை உருவாக்கினார்.
- 1975ல் - 'நற்செய்தி அறிவிப்பு' எனும் மடலை எழுதினார்.
- 1978ல் திருச்சபை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது திருத்தந்தை 6ம் பவுலின் மறைவு
- அவரைத் தொடர்ந்து வந்த 1ம் ஜான் பவுல் - 33 நாட்கள் மட்டும் பணிபுரிந்து இறந்தார்.
- அவருக்குப் பின் வந்த ஜோசப் கரோல் ஒய்தீவா - போலந்து நாட்டவர் - இத்தாலியர் அல்லாதவர். 2ம் வத்திக்கான் சங்கக் கருத்துகளை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தினார்.
- பல திருமடல்களை வெளியிட்டவர். உ+ம் 'இக்காலத்தில் மறைக்கல்வி ......'
- 129 நாடுகளில் 617 நகரங்கள் 12 இலட்சம் கி.மீ பயணித்து மக்களைச் சந்தித்து 2382 மறையுரைகளை நிகழ்த்தியுள்ளார்.
- 6ம் பவுலுக்குப் பின் - 25 ஆண்டுகளுக்குப் பின் (1995ல்) தை-19ம் திகதி ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தார். அதன்போது திருத்தூதரான ஜோசப்வாஸ் அடிகளாரை 'அருளாளர்' நிலைக்கு உயர்த்தும் நிகழ்வு இடம்பெற்றது.



பகை உணர்விலும் வீண் தற்பெருமையிலும் வீழ்ந்துவிடாமல் இருப்பதற்கு நம்மைவிட உயர்ந்தவர்களாக பிறரை மதித்து நடத்துவதே சிறந்த வழி!

ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதும் ஆண்டவரைப் பறைசாற்றுவதும் எளிதானவை அல்ல, அவற்றை ஒரு போராக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

'உலக வலம் வரும் திருத்தூதர்' எனவும் அழைக்கப் பெற்றார். C.C.C 'கத்தோலிக்கத் திருச்சபையில் மறைக்கல்வி' என்ற ஆவணம் 2ம் வத்திக்கான் சங்கம் தொடங்கியதன் 30ம் ஆண்டின் நினைவாக வெளியிடப்பட்டது.

**இலங்கைக்கு வரும் திருத்தந்தையின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் எவ்வாறு அமைந்துள்ளன?**

இலங்கை ஆயர் பேரவை இவ்வருடம் (2014) மே மாதம் திருத்தந்தையை சந்திக்கும் 'அத்லிமினா' நிகழ்வில் ஒன்றாக சந்தித்தபோது, திருத்தந்தையை இலங்கைக்கு வரும்படியும், அருளாளர் ஜோசப்வாஸ் அடிகளாரைப் புனிதராக உயர்த்தும்படியும் ஏகமனதாக விண்ணப்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவ்விண்ணப்பத்தை தமது முக்கிய கவனத்தில் எடுப்பதாக உறுதியளித்தார்.

அதன்படி 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி இலங்கை வரவுள்ளதாகவும், அப்போது அருளாளர் ஜோசப்வாஸ் அடிகளாரைப் புனிதராக ஏற்படுத்தப்போவதாகவும் நற்செய்தியை அறிக்கையிட்டார். அவர் இங்கு தங்கியிருக்கும் 13-14ம் திகதிகளில் பின்வரும் முக்கிய நிகழ்வுகளில் பங்குகொள்ளவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1. 13ம் திகதி காலை 09.00 மணிக்கு வருகை
2. ரத பவனியாக கொழும்புக்கு
3. ஜனாதிபதியுடன் சந்திப்பு
4. சர்வமதத் தலைவர்களுடன் சந்திப்பு
5. 14ம் திகதி காலை 08.30 மணிக்கு காலி முகத்திடலில் திருப்பலி ஜோசப்வாஸ் அடிகளார் புனிதராகத் திருநிலைப்படுத்தப்படுதல்
6. மடு விஜயம்
7. மடுவில் விசேட வழிபாடு, ஆசியுரை

இந் நிகழ்வுகளுக்கான பல்வேறு வகையான ஆயத்தங்களையும் இலங்கை ஆயர் பேரவையும், ஆணைக் குழுக்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன. இலங்கை அரசும் தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவதாக வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் தனது வரையறைக்குட்பட்ட அனைத்துப் பணிகளையும் ஆரம்பித்துவிட்டது. இலங்கை ஆயர் பேரவையும் நிதிக்குழு, வழிபாட்டுக்குழு என பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.




நாம் மூன்றாம் உலகப் போர்க்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இப்போர் தவணை முறையில் நடைபெறுகிறது.

■

ஒவ்வொரு குடும்பமும் சமுதாயம் என்ற கட்டிடத்தின் செங்கல்லாக விளங்குகின்றது. குடும்பத்தில்தான் நாம் மனிதர்களாக உருவாக்கப்படுகின்றோம்.

■

நாம் விதைத்தவை முளைவிட்டு வளர இறைவன் உதவுவார் என்ற உறுதிப்பாட்டுடன் நாம் தொடர்ந்து விதைத்துவருகிறோம்.

■

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைத் திருத்தூதுப் பயணம் எம் நாட்டுக்கு ஒற்றுமையையும், அமைதியையும் கொண்டு வரும். இதில் நம்பிக்கை வைக்க வேண்டுமென இலங்கை ஆயர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் பலவித முன்னேற்பாடுகளையும், ஆயத்தங்களையும் முன்னெடுத்துச் செல்லும் இலங்கைத் திருச்சபை, இந்த உன்னத நிகழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறவும், ஆன்மீக வழியில் இந்நிகழ்வுக்கு இறைமக்களாகிய நாம் எம்மை ஆயத்தம் செய்யவும் உதவியாக நூறு நாட்கள் கொண்ட ஆன்மீக ஆயத்த காலம் தேவத்தை இலங்கை மாதா பேராலயத்தில் இடம் பெற்ற திருப்பலியோடு ஆரம்பமானது.

**® திருத்தந்தையின் இலங்கை வருகையின்போது, இடம்பெறும் முக்கிய நிகழ்வாக அருளாளர் யோசப்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு அமையவிருக்கிறது.**

**பிறப்பால் இந்தியரான யோசப்வாஸ் அடிகளாருக்கு இலங்கையில் புனிதர் பட்டம் வழங்குவதன் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் கூறுங்கள். அத்தோடு திருச்சபையில் புனிதர் பட்டம் வழங்குவதற்கு எத்தகைய அளவுகோல்கள் கையாளப்படுகின்றன என்பது பற்றியும் அறியத்தாருங்கள். ...**

'கடவுள் ஏன் மனிதனானார்?' என்கிற கேள்விக்கான பதிலை நமது இறை நம்பிக்கை அறிக்கையில் காண்கிறோம். அதாவது, 'மனிதரை புனிதராய் ஆக்கிடவே, புனிதராம் கடவுள் மனிதனானார்'. புனிதர் என்றால் பாவங்களிலிருந்து விலக்கப்பட்டு கடவுளின் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். வேறொரு வகையில் கூறப் புகுந்தால் இவ்வுலகில் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றியதால் என்றும் விண்ணகக் கூட்டத்தில் வாழ்பவர்கள் புனிதர்கள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ இறைநம்பிக்கைக்காகக் கொடுமைப் படுத்தப்பட்ட மனிதர்கள் அனைவரும் வேத சாட்சிகள் ஆயினர். அத்தோடு ஏராளமான மனிதர்கள் யார் கண்ணுக்கும் வெளிப்படாமல் மறைவான புனித வாழ்வை இம்மண்ணில் வாழ்ந்து, தற்போது மோட்சத்தில் புனிதராகப் பேரின்பம் அனுபவித்து வருகின்றனர்.

ஒருசிலர் இந்த உலகில் வாழும்போதே புனிதர்களாகக் கருதப்படுகின்றனர். உதாரணம்: புனித அந்தோனியார் இறந்தபோது 'புனிதர் இறந்துவிட்டார்' என மக்கள் அழுதனராம். அன்னை தெரேசாள் புனிதராகக் கருதப்பட்டார். ஒருவரைப் புனிதராகப் பிரகடனப்படுத்தும் உரிமை திருத்தந்தைக்கே உண்டு. மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர், இறந்தும் மக்களுக்காகப் பரிந்து பேசி மக்களுக்குச் சகாயம் புரிபவர், மக்களின் உள்ளங்களில் வாழ்பவர்கள் எனப் பல்வேறு காரணங்களுக்காக ஒருவரைப் புனிதராகப் பிரகடனம் செய்யலாம்.

இந்தியாவிலுள்ள பினவ்லிம் என்னுமிடத்தில், ஏப்ரல் 21ம் திகதி பிறந்து, 1711 ஜனவரி 16ம் திகதி இலங்கையிலுள்ள கண்டியில் இறைவனடி சேர்ந்தவர் ஜோசப்வாஸ். ஜனவரி 13ம் திகதி இலங்கை நாட்டிற்குத் திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் 2015, ஜனவரி 14ம் திகதி அருளாளர் ஜோசப்வாஸ் அடிகளாரை கத்தோலிக்க திருச்சபையின் புனிதராக அறிவிக்கவிருக்கிறார். ஒருவரைப் புனிதராக்குவதற்கு அவசியமானது அவர் வழியாக புதுமைகள் நிறைவேறியிருக்க வேண்டும். அருளாளர் ஜோசப்வாசைப் பொறுத்தளவில் 1995ல் இரண்டாம் பவுல் இலங்கைக்குத் திருப்பயணம் மேற்கொண்டபோது ஜோசப்வாசை அருளாளர் நிலைக்கு உயர்த்துவதற்குத் தேவையான புதுமை இருந்தது. அவ்விதமே அவரைத் தற்போது புனிதராகப் பிரகடனம் செய்வதற்குத் தேவையான புதுமைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. மருத்துவர்களாலும், திரு அவையினராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி 2015, ஜனவரி 14ம் திகதி இந்த அறிவிப்பை திருத்தந்தையே இலங்கையில் அறிவிப்பார். இதன் மூலம் இலங்கையின் அப்போஸ்தலரும் இலங்கையின் முதல் புனிதருமான ஜோசப்வாஸ் இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியா, ஆசியா, உலகமனைத் திற்கும் புனிதராக அறிவிக்கப்படவிருக்கிறார். டச்சுக்காரரின் கலாபனையிலிருந்து இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தைக் கட்டிக்காத்த புனித ஜோசப்வாஸ் நிச்சயம் நாம் ஆவலோடு எதிர்பார்க்கும் ஒப்புரவு, அமைதி, அன்பு இலங்கை வாழ் மக்களிடையே மலர்ந்திட பரிந்து பேசுவார்.

**o ஆயரவர்களே! அண்மைக் காலத்தில் உலக ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்ற ஒரு மதத் தலைவராக திருத்தந்தை காணப்படுகின்றார். அவருடைய உரைகள், நவீன ஊடகங்கள் வழியே நாளும் அவர் வெளியிடும் கருத்துகள் உலகின் அவதானிப்புக்கு உரியதாக இருக்கிறது. அந்தவகையில் திருத்தந்தையிடம் காணப்படும் தனித்துவங்கள் சிறப்புகள் எதிர்காலத் திருச்சபைக்கு அவரது வழிகாட்டல்கள் எப்படி இருக்கப்போகின்றன என்பது பற்றிக் கூறுங்கள்....**

கத்தோலிக்கத் திருச்சபைக்கு இறைவன் தந்த மாபெரும் கொடை என அழைக்கப்படுபவர் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தையாகப் பதவி ஏற்று ஒரு சில நாட்களிலேயே அனைத்துலக மக்களின் இதயங்களைத் தொட்டுவிட்டார். அவரது எளிமையான வாழ்வு அனைவரையும் கவர்ந்துள்ளது. வத்திக்கான் நகருக்குள்ளேயே உள்ள அலுவலகங்களிலும், ஆணைக்குழுக்களிலும் பாரிய மாற்றங்களை உட்புகுத்தியுள்ளார். ஏற்கெனவே

8ம் பக்.....

குறும்(பு)பா – 145

புத்தாண்டுத் திட்டமென்ன கூறு
புதுவாழ்வைக் காணமனம் மாறு
இத்தரையில் இதுவரலாம் அதுவரலாம் எதுவரினும்
புத்தியுடன் வாழ்வில் முன்னேறு!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் – எண்ணப் பதிவுகள் –

இலங்கையில் மட்டுமல்லாது முழு உலகமே ஆவலோடு எதிர்பார்த்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. போரில் கிடைத்த வெற்றிமூலம் அசைக்க முடியாத தலைவராக உயர்ந்து மேலெழும்பிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் மாவீரராகப் போற்றப்பட்டவர். அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியே ஒருவகையான ஜனநாயக சர்வாதிகார ஆட்சியை நடத்தியவர். இந்தச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி போருக்கும், அழிவுக்கும் காரணமாக இருந்த இனப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வை அவர் கண்டிருக்கலாம். ஆனால், அப்படி அவர் செய்யவில்லை. அவரிடமிருந்த பேரினவாத மனோபாவம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. அவருக்கு முந்திய ஜனாதிபதிகள் செய்ததைப் போன்றே அவரும் புலிகளையும், போர் வெற்றியையும் மூலதனமாக வைத்தே தமது அரசியலை நடத்தினார். அவரது பேரினவாத, சுய நலன் மிக்க, ஊழல் மிகுந்த ஆட்சி முறை அவரது மக்களிடத்தேயே அதிருப்தியை, வெறுப்பை ஏற்படுத்தியது. அவரது கட்சியை உடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தை அவரால் பெரும் இன்னல்களை, அழிவுகளை அனுபவித்த-அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சிறுபான்மை இனங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டன. தமக்குக் கிடைத்த ஒரே ஆயுதமான வாக்குச் சீட்டைப் பயன்படுத்தி 'வெல்ல முடியாதவர்' என்று கருதப்பட்டவரை வீட்டுக்கு அனுப்பின. பெரும்பான்மைக்குள் ஏற்பட்ட பிளவும், சிறுபான்மைக்குள் எழுந்த ஒற்றுமையும் இலங்கையில் ஒரு புதிய வரலாற்றை எழுதியுள்ளது. மைத்திரிபால சிறிசேன அவர்கள் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஆள் மாறியுள்ளது. அரசாங்கம் மாறியுள்ளது. கொள்கைகளும், ......



8ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

06ம் பக்கத் தொடர்....

பல நாடுகளுக்கான பயணங்களை மேற்கொண்டு தலத்திருச்சபைகளை ஊக்குவித்து வருகின்றார். எந்தெந்த நாடுகளில் எல்லாம் இயற்கை அனர்த்தங்களினாலும், யுத்தங்களினாலும் மனித உயிர்ப் பேரழிவுகள் இடம்பெறுகின்றனவோ அங்கு கண்டனங்களையும், அனுதாபச் செய்திகளையும் அனுப்பிக்கொண்டே இருக்கின்றார். ஆயர்களுக்கு அறிவுரை கூறுகையில் 'மந்தையின் பராமரிக்கும் பண்பு நலனை' (Smell of the Sheep) மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்கும் அவரே மாதிரி காட்டுகின்றார்.

இளைஞர், யுவதிகளின் உள்ளங்களைக் கவர்ந்த இலட்சியவாதியாகத் திகழ்கின்றார். அவரது பேச்சு, போதனை, மறையுரை, நற்செய்தி அறிவிப்பு அனைத்திலும் ஆன்மீக வழிகாட்டல்கள் ததும்புகின்றன. அண்மையில் அவர் வெளியிட்ட 'இறை நம்பிக்கை ஒளி' (LUMEN FIDEE) 'நற்செய்தியின் மகிழ்ச்சி' (Evangelin Gaudium) ஆகிய இரு திருத்தூது மடல்களும் அவரது ஆழ்ந்த இறையியலையும் ஆன்மீக முதிர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன.

இன்றைய உலகில் காணப்படும் கடவுள் புறக்கணிப்பு, உலகமயமாக்கல், பொருளாதார ஏற்றத் தாழ்வில் ஏற்பட்டுள்ள மாபெரும் இடைவெளி, அருட்பணியாளர்களிடம் நற்செய்தி அறிவிப்புப் பணியில் உயிர்த்துடிப்பு மிக்க ஆர்வமின்மை, ஊழல், பணக்காரர்களின் வரி ஏய்ப்பு, பண ஆதாய நோக்கம், மதச் சுதந்திரமற்ற நிலை, கிறிஸ்தவர்களுக்கெதிரான தாக்குதல்கள், மத நல்லிணக்கமற்ற நிலை, நிறுவனமயமாகியுள்ள திருச்சபை, ஏழைகள்மீது அக்கறையற்ற நிலை போன்றவைகளைத் திருத்தந்தை இம்மடல்களில் கண்டிக்கிறார். அத்துடன், திருச்சபை எவ்வாறு ஏழைகள் மீது அக்கறையுள்ள திருச்சபையாக மாறுவது, அதன் ஆட்சிமுறையில் சீர்திருத்தம் கொண்டு வருவது என்று திருச்சபையை ஒரு முழுமையான புதுப்பித்தலுக்கு அழைக்கிறார் திருத்தந்தை.

**நன்றி ஆயர் அவர்களே! திருத்தந்தையின் வருகை தொடர்பாகவும் யோசப்வாஸ் அடிகளாருக்குப் புனிதர் பட்டம் வழங்குவது பற்றியும் பல தகவல்களை, பயனுள்ள கருத்துகளை நமது வாசகர்களுக்கு வழங்கியுள்ளீர்கள்.**

**தங்களுடைய பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் சிரமம் பாராது இந்நேர்முகத்தில் கலந்துகொண்டமைக்கு நமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

■ நேர்கண்டவர் : மலர்வேந்தன் -

## நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல்

தொடர்......

ஆட்சிமுறையும் மாறுமா...? என்பது கேள்விக்குறிதான். ஏனெனில் எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். சிறுபான்மையினரின் பிரச்சினைகளைப் பொறுத்த அளவில் அவர்கள் எப்போதும் கைகோர்த்துக் கொண்டவர்களே!

இந்நாட்டில் அமைதியும் சமாதானமும் நிறைந்த சமூகம் ஒன்று அமைய வேண்டுமாயின் அது சிறுபான்மை இனங்களையும் உள்ளடக்கிய நீதியும், சமத்துவமும் நிறைந்த ஆட்சிமுறை ஒன்றை உருவாக்குவதன் ஊடாகவே நிகழமுடியும். அரசியல் நலனுக்காகவே பேரினவாதத்தை நீரூற்றி வளர்த்துவரும் அரசியல்வாதிகளின் கையில் அரசாங்கம் உள்ளவரை இங்கு புதுமைகள் ஏதும் நிகழ்ந்துவிடும் என்று அதீத நம்பிக்கைகளை நாம் வளர்த்துக்கொள்ளத் தேவையில்லை. காலம் உருவாக்கித்தரும் மாற்றங்கள் பல பாடங்களை அனைவருக்கும் கற்றுத்தரும். அதுவரையில் விழிப்போடு காத்திருப்பதும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்துவதுமே நாம் செய்யக்கூடியது!



- மலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆழியிலும் அவனுக்குத் தொல்லை
அணைகளால் ஆறுகளும் இல்லை
வாழுமிட மெங்கும்வதை பட்டுநிற்கும் தமிழனுக்கு
சூழுமிடர் நீங்குவதெந் நாளோ?

- மலர் -




காகம்போல் பகிர்ந்துண்டு வாழவேண்டும்!
கதிரவன்போல் ஓய்வின்றி உழைத்தல் வேண்டும்!
மேகம்போல் குளிரவைக்கும் நெஞ்சம் வேண்டும்!
விளக்கைப்போல் பயன்நல்கி அணையவேண்டும்!
வேகமுள்ள ஆற்றைப்போல் கடமைவேண்டும்!
விசுவாச நாயைப்போல் நன்றி வேண்டும்!
பாகினைப்போல் சுவையோடு பேச வேண்டும்!
படகைப்போல் தாங்குகின்ற பான்மை வேண்டும்!
மானைப்போல் கெடுதல் செயாப் பண்பு வேண்டும்!
மாங்குயில்போல் பிறர்க்கினிமை சேர்த்தல் வேண்டும்!
யானையைப்போல் உடல்வலிமை பெறுதல் வேண்டும்!
எருதைப்போல் உலகூட்ட உழைக்க வேண்டும்!
தேனீப்போல் தினம் உழைக்கும் சீர்மை வேண்டும்!
தென்றலைப்போல் இதமாக உலவவேண்டும்!
வானைப்போல் பரந்திருக்கும் நெஞ்சம் வேண்டும்!
வண்கிளிபோல் இல்வாழ்வில் மகிழ்ச்சி வேண்டும்!
ஆல்மரம்போல் நிழல்தந்து காக்க வேண்டும்!
அகிலைப்போல் மணம்தந்து தேயவேண்டும்!
பால்நிலவாய்க் குளிர் நகையைப் பொழிதல் வேண்டும்!
பன்னீர்போல் பிறர்விரும்ப வாழவேண்டும்!
சூல்பயிர்போல் தன்னடக்கம் இருத்தல் வேண்டும்!
தும்பைமலர்த் தூய்மையினைப் பெறுதல் வேண்டும்!
மேலான படைப்புலகம் நமக்குக் காட்டும்
மேன்மைமிகு பாடங்கள் ஒன்றிரண்டா....?

# “படைப்புலகம் காட்டும் பாடங்கள்”

இயற்றியவர் - கவிஞர் கா. வேழவேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




தனது நண்பன் குறிப்பிட்ட நேரத்திற்குத் தகுந் தாற்போல், அந்தத் தனியார் மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்தான் அவன்.

அந்த நேரத்திற்கு அங்கு நோயாளர் எவரும் வந்திருக்கவில்லை. அடிக்கடி கைக் கடிகாரத்தை நோட்டமிட்டபடி காத்திருந்தான்.

கிட்டத்தட்ட அரைமணி நேரமாகிவிட்டிருந் தது. அதற்குமேல் அவனால் பொறுமை காக்க முடிய வில்லை.

திடீரென மனதில் ஒரு சந்தேகம் தோன்றியது.

'வரவேற்பாளரைக்கூடக் காணவில்லையே. இன்று கிளினிக் இல்லையோ' எனத் தோன்றியது.

அது பற்றிய எந்தவொரு அறிவித்தலும் இல்லாததால், இருக்குமென்று நினைத்தான்.

இப்போதெல்லாம் திடீர் திடீரென சந்தேகங்கள் முளைக்கத் தொடங்குகிறது. ஏன், எதற்கென்று புரியாத மனநிலையில் குழம்பியிருந்தான்.

மறுபடியும் நேரத்தைப் பார்த்தான். பத்து நிமிடங்கள் கழிந்திருந்தன.

அவர் குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்றும் பிந்தா மல் அங்கு நிற்கவேண்டுமென்று நண்பன் அடித்துச் சொல்லியிருந்தான்.

ஒருவேளை தான் வந்திருப்பது அவருக்குத் தெரியாதிருக்குமோ...!

சொந்த வீட்டில்தான் கிளினிக் நடப்ப தாகவும், மாடியிலேயே அவர் குடியிருப்பதாகவும் நண்பன் சொல்லியிருந்தான்.

இவன் வரவையறிந்ததும் அவர் தனிக் கவனம் எடுப்பாரென அவன் குறிப்பிட்டது, சட்டென ஞாபகத்திற்கு வந்தது.

இப்போதெல்லாம் தனக்கு மறதியும் அதிக மென பெருமூச்சு விட்டான்.

'ஹோலிங் பெல்' கண்ணில் பட்டது.

அழுத்துவோமா, விடுவோமா? அது நாகரிக மில்லையென்று தெரிந்தேயிருந்தது.

வேறு வழி தெரியாமல் மறுகணமே மனதை மாற்றிக்கொண்டான். இரண்டு பஸ் மாறியேறி வீட்டிற் குப் போகவேண்டும். இருட்டிவிடும். பின் நீண்ட தூரம் நடக்க வேண்டும்.




இந்த மருத்துவரை அவனுக்கு முன் பின் தெரியாது. இருந்தும் பெல்லை ஒலிக்கவிட்டான்.

கிளினிக் இல்லையென்றால் காத்திருப்பானேன் என எண்ணினான்.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இருங்கோ, வாறன்"

என்றதும் அதிர்ந்தான். அவர்தான் டொக்டரா....?

**த**ன்னைப்பற்றி அவர் என்ன நினைத்திருப் பாரோ ...? என அறிவில் உறைத்தது. மனம் கூனிக் குறுகிப்போனது.

அப்போதுதான் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே ஒரு பெண் வந்தாள். நேரே படியேறிப் போனவள், போன வேகத்தில் திரும்பிவந்து முன் கதவைத் திறந்தாள். சிறிது நேரத்தில் டொக்டரும் வந்தார்.

'தன்னைக் கடிந்துகொள்வாரோ?'

அவள் கதவைத் திறந்து, இவனை உள்ளே அழைத்தாள்.

குற்ற உணர்வுடன் ஆசனத்தில் அமராது அவர் முன் நின்றான். ஆசனத்தில் அமரச் சொல்லி சைகை காட்டியவர், அவனைப் பற்றி - அவன் குடும்பத்தைப் பற்றி - சூழலைப் பற்றியெல்லாம் விசாரித்தார்.

அவனது பெயர், வயது பற்றி எதுவுமே கேட்கவில்லை. மருந்துச் சிட்டையும் எழுதவில்லை. எந்தவொரு பதிவுமில்லை.

குறித்தவொரு மருந்தை எடுப்பித்து, நாக்கை நீட்டச்சொல்லி, 'ஸ்ட்ரோ' வால் நாக்கு நுனியில் ஒரு துளிதான் விட்டார்.

ஒரு துளிதான். சில கணங்களிலேயே மனம் அமைதியடைவதாக உணர்ந்தான்.

அவர் சொன்னார் -

"நீங்கள் தினமும் ஒரு 'பி-கொ-கப்ஸூல்' எடுக்கவேணும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஒரு மாதத்திற்கு இதேநேரம் இங்கை வரவேணும். எல்லாம் சரிவரும். ஒன்றும் யோசிக்க வேண்டாம். சரி, மிஸ்டர் பிரதீப், நீங்கள் போகலாம்"

ஆச்சரியத்துடன் அவரை ஏறிட்டான்.

பொக்கற்றில் கை வைத்தபோது, அவர் கையமர்த்தினார்,

"பிறகு பார்ப்பம்"

அவன் நன்றி தெரிவித்து எழுந்ததும், அவள் கதவைத் திறந்து வெளியே விட்டாள். இப்போது வெளியே பலர் காத்திருந்தார்கள்.

வியப்பிலிருந்து இன்னமும் அவன் விடுபட வில்லை. வெளியே ஒரு புதிய உலகத்தைப் பார்ப்பது போலிருந்தது. பார்ப்பதெல்லாம் மங்கலாகவே தெரிந்த விழிகளில், அனைத்தும் தெளிவாகத் தெரிந்தது.

டென்ஷனிலிருந்து முற்றாக விடுபட்டதாக உணர்ந்து, தனது நண்பனை மனதுக்குள் வாழ்த்திக் கொண்டான்.

'மனிதம்' என்பதை இந்த மருத்துவரிடம் கண்டதில் மலர்ந்தான்.

சுயநலம் மிக்கவர்களையே பார்த்துப் பழக்கப் பட்டவனுக்கு, இது ஒரு புது அநுபவமாக இருந்தது.



## பாலின வேறுபாட்டின் இடைவெளி குறைகிறது

**கடந்த பத்து ஆண்டுகளில் உலக அளவில் ஆண், பெண் பாலின வேறுபாட்டின் இடைவெளி குறைந்துள்ளதால் அரசியலிலும், பணியிடங்களிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது என்று உலகப் பொருளாதார நிறுவனமான டபிள்யு ஈ எஃப் அறிவித்துள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**2015** ஜனவரி 14ம் நாள் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு வரலாற்றில் பொறிக்கப்பட்ட பொன்நாள். கடந்த இருபது வருடங்களாகக் காத்திருந்தமைக்கு, இறைவனால் அருளப்பட்ட மாபெரும் பரிசு. இலங்கை நாட்டின் அப்போஸ்தலரான முத்திப் பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளார் புனிதராக திருநிலைப்படுத்தப்பட்ட நிகழ்வு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இலங்கை மண்ணிலே நடைபெற்றது, கத்தோலிக்க விசுவாசிகளின் இடைவிடா வேண்டுதலுக்குக் கிடைத்த இறை அருளேயாகும்!

1713ம் ஆண்டிலேயே ஜோசவ்வாஸ் அடிகளாருக்குப் புனித பட்டம் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தபோதும் கூட, முறையான ஆய்வுகள் நடைபெறாமையும், நிபுணத்துவம் வாய்ந்த ஆய்வாளர்கள் சொந்த நாட்டிலோ, அயல் நாடுகளிலோ இல்லாமையும், ஒல்லாந்தர் 1796ல் இலங்கையை விட்டுச் செல்லும்வரை, அவ்வகையான ஆய்வுகளுக்குத் தடை விதித்திருந்தமையும் புனித பட்டம் அளிப்பதில் தடைகளாக இருந்தன. ஆயினும், இலங்கை ஆயர்களினதும் கத்தோலிக்க மக்களினதும் தொடர்ச்சியான வேண்டுதல்களினால் 1995ல் இலங்கைக்கு வந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரால் புனித நிலைக்கு முன்னோடியான முத்திப் பேறுபெற்ற பட்டம் வழங்கப்பட்டு அடிகளாரின் புனித நிலைக்கு அங்கீகாரமளிக்கப்பட்டது.

1651ம் ஆண்டு சித்திரை 21ம் திகதி சல்சிடேயில் பெனங்லிம் என்னும் ஊரில் கிறிஸ்டோபர் வாஸ், மரியடி மிரண்டா என்னும் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். ஐந்து சகோதர சகோதரிகள் கொண்ட குடும்பத்தில் தான் ஒரு குருவாக வரவேண்டும் என்பதில் உறுதியான பற்றுக்கொண்டவராய், தளராத நம்பிக்கையுடன் இருந்து செப தவ வேண்டுதல்களினால் அதனை அடைய

## புனித நிலைக்கு உயர்த்தப்பட்ட இலங்கை அப்போஸ்தலர்



முயற்சித்து வந்தார். 1676ல் ஆயர் ஆண்டனியோ பிரண்டவோ அடிகளாரால் ஜோசப்வாஸ் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இலங்கைக் கத்தோலிக்க மக்கள் 1658க்குப் பின்னர் குருக்களின்றி ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் இருப்பதை, கொழும்பு வந்து சென்ற மக்காவோ நகர குருவானவரால் அறிந்து மிக வேதனையடைந்தார்.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைப் போலவே தென்னிந்தியாவின் கொச்சின், தூத்துக்குடி போன்றவையும் ஒல்லாந்தர் ஆட்சி நிருவாகத்தில் இருந்தமையால் கத்தோலிக்க மக்களோ, குருக்களோ தம்மை வெளிப்படுத்த முடியாத அடக்கு முறைக்கு உள்ளாகி இருந்தனர். இலங்கைக்கு வரவேண்டுமென்ற தனது கனவு நீண்டகாலத்தின் பின் கனிந்ததினால், தொழிலாளியாக மாறுவேடம் பூண்டு இலங்கைக்கு உழைக்கச் செல்பவராக ஒல்லாந்த ஆளுனரின் அனுமதி பெற்று, படகில் பிரயாணம் செய்து 1678ல் மன்னார்க் கரையை அடைந்தார். தொழிலாளி வேடம்கொண்டு இலங்கை புறப்பட்டதால் சீவியத்திற்கென கையில் எதுவும் இருக்கவில்லை. ஆகவே, வீடு வீடாகப் பிச்சை எடுத்தே உண்டு, இலங்கையில் தனது போதகப் பணியை ஆரம்பித்தார்.

இலங்கையில் ஜோசப் வாஸ் அடிகளார் மறைபரப்புப் பணி செய்த காலப்பகுதி (1687-1711). இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கரையோர நிருவாகம் ஒல்லாந்தர் வசமிருந்த காலப்பகுதியாகும். 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயப் பிரிவனை குடியேற்ற நாடுகளிலும் தீவிரமாகக் கடைப் பிடிக்கப்பட்டது. போர்த்துக்கீசரது (1505 - 1658) நிருவாக காலத்தில் தமது சமய வழிபாடுகளைச் செய்வது சட்ட விரோத குற்றமாக்கப்பட்டது. ஜோசப்வாஸ் அடிகளார் கழுத்தில் செபமாலை அணிந்துகொண்டு பிச்சைக்காரனாக தெருக்களில் கத்தோலிக் கரைத் தேடியலைந்தார். உண்மையான கத்தோலிக்க விசுவாசம் கொண்டோரிடம் தம்மைக் குருவாக அடையாளம் காட்டினார்.

முப்பதாண்டுகளுக்குப் பின்னர் யாழ்பாணத்து மூப்பனார் ஒருவருடைய வீட்டில் மக்கள் முதல் தடவையாக அடிகளா ரின் திருப்பலியில் பங்கேற்றனர். தமிழ் மொழியை விரைவாகக் கற்றுக்கொண்ட அடிகளார் சில்லாலையில் இரண்டு வருடங்கள் மறைவாகத் தங்கியிருந்து அருட்சாதனங் களை வழங்கி, திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றி வந்தார். வான் றீத் என்ற ஆளுனருக்கு, ஒரு கத்தோலிக்கக் குருவான வர் மறைவாகப் பணி செய்கிறார் என்ற புலனாய்வுத் தகவலின்படி, நத்தார் தின நள்ளி ரவில் திருப்பலிக்காக ஆயத்தம் செய்யப்பட்டி ருந்த வீட்டையும், அயல் வீடுகள் இரண்டை யும் படையினர் அடித்து நொறுக்கி, மக்களை யும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினர். இக்காரியங்களுக்கு எட்டுப் பிரிவுகளையும் சேர்ந்த முதலியார்களே பொறுப்பு வாய்ந்தவர்க ளெனக் கருதி, எட்டுப் பேரையும் புரட்டஸ் தாந்து மதத்திற்கு மாறும்படி வற்புறுத்தப் பட்டார்கள். அவர்கள் மறுக்கவே ஒவ்வொரு வராகக் கொல்லப்பட்டு, அவர்கள் வேதசாட்சி களாக மரித்தார்கள்.

யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங் களில் தனது பணிகளை மறைவாகவே ஆற்றிவந்த அடிகளார், கண்டி இராசதானியின் எல்லைக்குட்பட்ட புத்தளம் சென்று சுதந்திர மாக மறைபணியாற்றினார். புத்தளத்தில் இவருடன் அருட்தந்தை யுவான் டீ பிரகன்சா வும் பணியாற்றினார். கண்டியிலிருந்து அடிக்கடி புத்தளம் வந்துபோன போர்த்துக்கீச வியாபாரி ஒருவர் ஒரு குருவானவரை கண்டிக்கு வருமாறு அழைத்தார். அருட்தந்தை யுவான் டீ பிகன்சா நோய்வாய்பட்டு இருந்ததினால், அடிகளார் கண்டிக்குச் செல்ல முடிவெடுத்தார். கண்டியில் உளவுபார்க்க போர்த்துக்கீசரால் அனுப்பப்பட்ட உளவாளியென்றே அரசனால் கருதப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். காலப்போக்கில் இவரது இறைபற்றுக்கொண்ட நடத்தைகளினால் கவரப்பட்ட அரசன், காவலி லிருந்து இவரை விடுவித்து பணிசெய்ய சுதந்திரமளித்தான்.

1696ல் கண்டிப் பிரதேசமெங்கும் கடும் வரட்சி நிலவியது. அரசன் பௌத்த, இந்து துறவிகளிடம் மழைவேண்டிப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மழை பெய்ய வில்லை. இறுதியாக ஜோசப்வாஸ் அடிகளாரி டம் பிரார்த்திக்குமாறு வேண்ட, அவர் நகர் நடுவே பீடம் அமைத்து அதில் சிலுவையை வைத்து செபித்துக்கொண்டிருந்த வேளையில் பேரிரைச்சலுடன் மழை பெய்தது. ஆயினும் அவர் செபித்த பீடத்தின் மேல் ஒரு துளிகூட விழவில்லை. இதை அவதானித்த அரசன் கண்டி இராச்சியத்தில் அவரின் பணிகளுக்கு அனுமதியளித்தான்.

இலங்கையில் மறைபரப்புப் பணி செய்ய ஊழியர்கள் தேவை என்பதை அடிகளார் கோவை தலைமையகத்துக்குத் தெரிவித்தார். அதனால், ஒறட்டோரியன் சபைக் குருக்கள் இருவர் 1697ல் இலங்கை வந்தனர். அடிகளா ரின் எளிய, பக்திமிகுந்த வாழ்க்கையினால் கவரப்பட்ட மக்கள் இவரை 'சம்மனசு சுவாமி யார்' எனவும் அழைத்து வந்தனர். தனது முதிர்ந்த வயதில் உடல் நிலை ஆரோக்கி யமல்லாத போதும் மரணத் தறுவாயில் உள்ளவர்கட்கு 'நோயிற் பூசுதல்' அருட் சாதனம் அளிக்கத் தவறமாட்டார். அவ்வாறு ஒருவருக்கு அருட்சாதனம் வழங்கச் செல்லும் போது மாட்டு வண்டி, பள்ளத்தில் குடை சாய்ந்து அடிகளார் விழுந்து மயக்கமுற்றார். இதனைத் தொடர்ந்து படுக்கையிலேயே நோயாளியாக இருந்து 1711 தை 16ம் நாள் அடிகளார் இறைபதமடைந்தார்.

கண்டி இராசதானியின் கடைசி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 48வது உலக அமைதி நாளுக்கான திருத்தந்தையின் செய்தி!



மனிதர்கள் அனைவருக்கும் அமைதியை வேண்டும் வேளையில், மனிதர்களால் உருவாகும் போர்களும் மோதல்களும் அகன்று, இயற்கையால் விளையும் அழிவுகளும், நோய்களும் தீரவேண்டும் என்று இறைவனை தான் மன்றாடுவதாக! 2015ம் ஆண்டின் முதல் நாள், ஜனவரி முதல் தேதியன்று கத்தோலிக்கத் திருஅவை சிறப்பிக்கவிருக்கும் 48வது உலக அமைதி நாளுக்கென வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

இனி ஒருபோதும் அடிமைகள் அல்ல. ஆனால், உடன்பிறப்புகள் என்ற மையக் கருத்துடன் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கியுள்ள இச்செய்தியில், அடிமைத்தனத்தின் வரலாறு. அதன் இன்றைய நிலை, அதனை அறவே ஒழிக்கும் வழிகள் போன்ற கருத்துகளைப் பகிர்ந்துள்ளனார்.

திருத்தூதர் பவுல், பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தில், அடிமையாக இருந்த ஒனேசிமுக்காக பரிந்துரைத்த வார்த்தைகளான, 'இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையை விட மேலானவனாக, அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்' (பிலமோன் 15-16) என்ற சொற்கள் தனது அமைதி நாள் செய்திக்கு வித்திட்டன என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மனித வரலாற்றில் அடிமைத்தனம் முன்னொரு காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்கமாக இருந்தாலும், இன்றைய காலத்தில் அது ஒரு குற்றம் என்ற உண்மை, உணர்வளவிலும், சட்டங்கள் வழியாகவும் நமக்கு உணர்த்தப்பட்டுள்ளது' என்பதை திருத்தந்தை தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிப்படை மனித மாண்பு மறுக்கப்படும் போது அல்லது மறக்கப்படும்போது, மனிதர்கள் ஒரு பொருளாகக் கருதப்பட்டு, அடிமைகளாக விற்கப்படுகின்றனர் என்று எடுத்துரைத்தத் திருத்தந்தை, இத்தகைய மனநிலை உலகில் இருப்பதால், அடிமைத்தனம் இன்றைய காலத்திலும் தொடர்கிறது என்று கூறினார்.

பணத்திற்காக எதையும் செய்யத் துணியும் மனநிலையும், தவறான கொள்கைகளால் போரிலும், மோதல்களிலும் ஈடுபடும் அடிப்படைவாத உணர்வுகளும், அடிமைத்தனம் வளர்வதற்கு முக்கிய காரணங்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தனிமனிதர்கள், அரசுகள், பன்னாட்டு நிறுவனங்கள் என்ற அனைத்துத் தளங்களிலும் அடிமைத்தனத்தை ஒழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திருத்தந்தை விண்ணப்பித்துள்ளார்.

அடிமையாக வாழ்ந்து, பின்னர் தன் சுதந்திரத்தை அடைந்து, தன் வாழ்வை இறைவனின் பணியில் அர்ப்பணித்த புனித ஜோசஃபின் பக்கிட்டா, அடிமைத்தனத்தின் அனைத்து காயங்களும் மனிதர்கள் மத்தியிலிருந்து அகல்வதற்கு நம்பிக்கை தரும் அடையாளமாக விளங்குகிறார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள அரசன் நரேந்திரசிங்க மன்னன் ஆவான். இவன் வாரிசு இன்றி இறந்ததினால் மனைவியின் சகோதரன் விஜயராஜசிங்கன் (நாயக்க வம்சம்) அரசனானான். இவன் இந்து சமயத்தவனாய் இருந்தபோதும், பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக கிறீஸ்தவ ஆலயங்களை அழித்தான். அவ்வாறு அழிவுகளை மேற்கொண்டபோது அடிகளாரின் கல்லறையும் அழிக்கப்பட்டது. காலப்போக்கில் கல்லறையின் அடையாளம் மறக்கப்பட்டுவிட்டது.

ஆயினும், இலங்கை கத்தோலிக்க மக்களின் மனங்களிலிருந்து அடிகளாரை அகற்ற முடியாது. அவர் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் அப்போஸ்தலர், இவரால் நமது மட்டக்களப்பு மண்ணும் புனிதமும் பெருமையும் பெறுகிறது. போர்த்துக்கீசர் காலத்தில் தாண்டவன்வெளியில் ஆரம்பிக்கப்பட்ட வியாகுல அன்னை ஆலயத்தை அடிகளார் தரிசித்து திருப்பலி நிறைவேற்றி அருட்சாதனங்களும் வழங்கியுள்ளார். ஒல்லாந்த படைவீரர்களால் வம்மி மரத்தில் கட்டிவைத்து கசையடி கொடுக்கப்பட்டது. இவ்வாறெல்லாம் தனது குருதியினாலே இயேசுவுக்காகச் சாட்சிபகர்ந்து, கத்தோலிக்க மறையை வளர்த்தெடுத்த ஜோசப்வாஸ் அடிகளார் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பது இலங்கைத் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் கொடையாகும்.

- லூக்காஸ் அலெக்சாண்டர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்புத்தாண்டிலே பிள்ளைகளிற்கும் பெற்றோர்கட்கும் தேவையான சில சிந்தனைகளைத் தருவதில் அக்கறைகொள்கின்றோம்.

பிள்ளைகள் பெற்றோரிடம் கூற விரும்புவது.... (பெரும்பாலும் சொல்லமாட்டார்கள்: மனதில் வைத்துப் புழுங்குவார்கள்)

1. என் உடன்பிறப்புகள், நண்பர்கள் என்று யாருடனும் என்னை ஒப்பிடாதீர்கள்.
2. நான் கௌரவக் குறைவான உடைகளை அணியமாட்டேன் என்பதை நம்புங்கள்: என்றாலும் எனக்குப் பிடித்துள்ள ஆடைகளையே கொள்வனவு செய்து தாருங்கள்.
3. என் பெற்றோர்களாகிய உங்களின் அரவணைப்புக்கு நான் ஏங்குகின்றேன் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.
4. எனக்கு விருப்பமான இசைகளையோ, உடுப்புகளையோ தலையலங்காரங்களையோ கேலி செய்யாதீர்கள்.
5. நல்ல பண்புகளை, உங்கள் உதாரணமான நன்நடத்தைகள் மூலம் எனக்கு உணர்த்துங்கள்.
6. உயர் கல்வியில், உங்களிற்குப் பிடித்தமானவற்றை எனக்குத் திணிக்காதீர்கள்: என் பாடத்துறை தெரிவுகட்கு அனுமதி கொடுங்கள்.
7. என்னில் விரும்பும் அம்சங்களையும், என்னை நீங்கள் விரும்புவதையும் அடிக்கடி சொல்லி என்னைப் பாராட்டுங்கள்.
8. என் நண்பர்கள் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தவோ, இழிவாகப் பேசவோ முயலாதீர்கள்.
9. என்னைப் பற்றிய நம்பிக்கைகளை இழக்காதீர்கள்.
10. எனக்கும் உங்களுக்கும் தலைமுறை இடைவெளியுள்ளதை மறந்துவிடாதீர்கள்.
11. பெரியவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை எனக்குச் சொல்லித் தாருங்கள்.
12. என் நண்பர்களின் விழாக்களில் நான் கலந்து கொள்வதையும் அனுமதியுங்கள்.
13. ஒரு நேரச் சாப்பாட்டு வேளையாவது நாம் அனைவரும் ஒன்றாக உரையாடி, ஒன்றாக அமர்ந்து சாப்பிட உதவுங்கள்.

**பெற்றோர் சொல்ல விரும்புவது :**

1. உங்களுடன் நீண்டநேரம் செலவு செய்ய விருப்பம்தான்: எங்கள் வேலைப்பளுக்களையும் உணர்ந்து கொள்ளுங்கள். ஆனால்,




- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாங்கள் எப்பொழுதும் உங்களுடன்தான் என்பதை நம்புங்கள்.

2. உங்கள் தேவைகளைக் கட்டாயம் நாம் நிறைவேற்றுவோம். எங்கள் நிதி நிலைமைகளையும் சற்று யோசியுங்கள். நிறைவேற்ற இயலாத பட்சத்தில் வாக்குறுதி தர சற்றுத் தயங்குவோம்.

3. உங்கள் நண்பர்களை எங்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

4. ஒருவேளையாவது குறிப்பாக இரவுணவின் போதாவது எங்களுடன் சேர்ந்துண்ணுங்கள்.

5. நண்பர்களுடன் நீங்கள் எங்கும் செல்லலாம், வரலாம்: நண்பர்களை முதலில் இனங்கண்டு கொள்ளுங்கள்: அவர்களைப் பற்றி எங்களுடன் கலந்துரையாடுங்கள்.


6. உங்கள் கவலைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்: நாங்கள்தான் உங்களின் சிறந்த பாதுகாவலர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

7. நாங்கள் கோபத்தில் ஏதாவது பேசியிருந்தால் மனதில் வைத்துக்கொள்ளாதீர்கள்.

8. தேவையானபோது எங்களைப் பாராட்டுங்கள்: அன்பு பாராட்டுங்கள்: நன்றி கூறுங்கள்.

9. திறமையானவர்களாக வந்தால் நீங்கள்தானே வாழ்க்கையில் பிரகாசிப்பீர்கள் - எங்கள் பிள்ளைகள் படிக்கவேண்டும், திறமைசாலிகளாக வரவேண்டும் என்று நாம் விரும்புவது தப்பா....?

10. உங்கள் குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டும் போது கோபம் கொள்ளாது பொறுமையாகக் கேளுங்கள்: அவ்வாறே எங்கள் குறைகளையும் சுட்டிக் காட்டுங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம்.



# அன்புடன் உங்களோடு...

எப்படியும் வாழலாம் என்பவன் பொறுப்பற்ற மனிதன். இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்பவன் சமூகத்தில் உயர்ந்த மனிதன். பழையவற்றைக் களைந்து புதியதை உருவாக்குவோம். எந்நிலையிலும், எந்தப் பயணத்திலும், ஏழ்மை வாழ்விலும் சேவை தேவை, அதுவும் மகிழ்ச்சியுடன், சிரிப்புடன் கூடிய சேவை தேவை!

சிலரது சிரிப்பு வாழவைக்கும்
சிலரது சிரிப்பு சீரழியவைக்கும்
சிலரது சிரிப்பு சரித்திரம் படைக்கும்
நமது சிரிப்பு ........?

இறைவா! இந்த ஆண்டு முழுவதும் ஒவ்வொரு உள்ளத்தையும் ஆசிர்வதியும். தனிமனித வாழ்வில், வளர்ச்சியும், குடும்பத்தில் நல்ல உறவுகளையும், சமுதாயத்தில், ஒற்றுமையையும் தந்து உமது அருளாலும், தூய கன்னி மரியாளின் அன்பாலும் எங்களை வழிநடத்தும். ஆமென்!

அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

ஆசிரியர்

## வாசகர் கருத்து!

**'தொண்டன்'** சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் சிறப்பானவை!

திருத்தந்தையின் வருகைபற்றிய விபரங்களுக்கு நன்றிகள்!

எமது நாட்டில் திருச்சபையைக் கட்டி வளர்த்த அருளாளர் யோசப்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற இருப்பதற்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்!

திருத்தந்தையின் இலங்கைக்கான திருப்பயணம் எவ்வித தடங்கலுமின்றி இடம் பெற மன்றாடுகின்றோம்.

**தொண்டனின்** சேவை நாடளாவிய ரீதியில் பரவட்டும். வாழ்த்துகள்!

திருமதி. அன்னம்மா சகாயம்,
ஸ்பிறிங்வெளி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் அவரே!

**ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்**

இரண்டாம் அருள் சின்னப்பர் மறைந்துவிட்டார் என்றதுமே முழு உலகமும் ஆடிப்போயிற்று. வரலாறு காணாத அனுதாபங்கள், ஏக்கங்கள், வேதனைகளின் வெளிப்பாடுகள்! முன்னெப்போதும் நடைபெற்றிராத வகையில் அதிகூடிய அரசத் தலைவர்களின் சமூகமளிப்பில் நடந்த அவரது இறுதிச் சடங்குகள் அவர் எந்த அளவிற்கு உலகளவில் ஏற்கப்பட்டிருந்தார், மதிக்கப்பட்டிருந்தார் என்பதை உலகிற்குப் பறைசாற்றியது. அது இன்று அவரை புனிதர்கள் வரிசையில் இறைவனின் அரசவையை அலங்கரிக்கும் வகையில் மரியன்னையின் மைந்தன் அவரை உயர்த்தி வைத்திருக்கின்றது.

வழமைபோல கருதினால்கள் பேரவை கூடுகிறது. மூடப்பட்ட மண்டபத்திற்குள்ளே அடுத்த பாப்பரசர் யார் என்கின்ற இலக்கை நோக்கி செபத்துடன் கூடிய தங்கள் எண்ணங்களின் வெளிப்பாட்டை வாக்குகள் மூலம் உலகம் பூராகவும் இருந்து வந்த கர்தினால்கள் வெளிப்படுத்திக்கொண்டிருந்த தருணத்தில் வத்திக்கான் பேராலய புகைக் கூண்டு 'இன்னும் இல்லை' என்பதைப் போல் கரும் புகையைக் கக்கிக் கொண்டு, முடிவிற்காக இதயப் பதை பதைப்புடன் புனித இராயப்பர் ஆலய சதுக்கத்தில் கூடி நின்ற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது.




அப்போதுதான் அந்த முடிவு எட்டப்பட்டது. அங்கிருந்த கருதினால்கள் அனைவருக்குமே ஒரு நிம்மதி, ஓர் ஆறுதல். முடிவை வழமை போல் தெரிவாகிய அந்தக் கருதினாலிடம் தெரிவிக்கின்றார்கள். முடிவை வெளிச் சொல்ல முதல் அவரது சம்மதத்தை அறிந்து கொள்ளும் சம்பிரதாய நிகழ்வாக. அவரோ மிகவும் பணிவுடன் தன்னால் அந்தப் பொறுப்பை ஏற்க முடியாதென்று மறுத்துவிடுகின்றார். ஏமாந்துபோன கருதினால்கள் மீண்டும் அடுத்த சுற்று முயற்சியில்! கடைசியாக புகைக் கூண்டு வெண்புகையைக் கக்குகின்றது. மக்கள் ஆரவாரம் கரைபுரண்டோடுகிறது. இறுதியில் 16 ஆம் ஆசீர்வாதப்பர் மக்களுக்குத் தரிசனம் தருகின்றார். ஏற்கனவே பொறுப்பெடுக்க முடியாது என்று அறிவித்து ஒதுங்கிக்கொண்டவரிலும் பார்க்க அடுத்த குறைவான வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் இருந்தவர்!! ஆண்டு மூன்று முடியவில்லை தாம் ஏற்றுக்கொண்ட தலைமை ஆயன் பதவியைச் சரிவர முன்கொண்டு செல்ல 16 ஆம் ஆசீர்வாதப்பரால் முடியவில்லை. திருச்சபையை வழி நடத்துவதொன்றும் சந்தோஷத்துக்குரிய விடயமாக இருக்கவில்லை. பல பிரச்சினைகள், முறைகேடுகள் அதனை ஊடுருவி வியாபித்து நின்றதால் புயலடிக்கும் காரிருளில் கொந்தளிக்கும் கடலில் கலத்தைச் செலுத்துவது போலாயிற்று. நோய் அவரைத் தாக்கியது. திடீரென இயலாமல் தள்ளாடும் முதியவர் போலானார். இயலாமை அவரைத் தாக்கிற்று. அந்த அந்தகாரத்திலும் கடல்மீது நடந்து வந்து திருச்சபையைக் காப்பாற்ற இயேசு வருவார் என்கின்ற விசுவாசத்துடன் ஆழமாகச் செபிக்கின்றார், அகலமாகச் சிந்திக்கின்றார். தன் பேரும், பதவியும், புகழுமல்ல திருச்சபையின் சிறந்த எதிர்காலமொன்றே தேவை என்று தன் பதவியை அவர் இராஜினாமாச் செய்கின்றார்.

மீண்டும் உலகைத் தாக்கும் அதிர்ச்சி! 'ஏன் இந்த விபரீதங்கள் அடுத்தடுத்து'. ஒவ்வொரு புதுப் பாப்பரசர்களும் தெரிவு செய்யப்படும் போதெல்லாம் அந்திக் கிறீஸ்துவாக பிரிவினைத் திருச்சபைகளால் 'இவர்தான் அவர்' என உருவகிக்கப்படும் அதர்மங்கள் மேடையேற்றப்படுகின்ற சூழலில், இவ்வளவு விரைவில் இன்னுமொருவரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மீண்டும் தலைவ னில்லாத் திருச்சபை... கருதினால்களின் போராட்டம்.... மூடிய மண்டபம்... கறுப்புப் புகை... கடைசியில் வெள்ளைப் புகை... மக்கள் ஆரவாரம். வெளிவருகின்றார் புதிய பாப்பரசர் ... யாருமே எதிர்பாரா நடத்தை முறைகளுடன் 'பிரான்சிஸ்' எனும் புது நாமம் கொண்டு... 'என்னை ஆசீர்வதியுங்கள்' என்று மக்கள் முன் தலை குனிந்து மக்கள் ஆசீர் இறைவன் ஆசீர் என்று தன்முன்னே மலைபோல் வளர்ந்துள்ள திருச்சபையின் வழிகாட்டுதலுக்குப் பலம் சேர்க்க முனைகிறார் அவர். அவர் வேறு யாருமில்லை இரண்டு வருடங்களுக்கு முன் யார் தனக்கு அந்தத் தலைமைப் பொறுப்பு வேண்டாம் என்று மறுத்தாரோ அதே கருதினால் ஜோர்ஜியோ மரியோ பெர்கொக்லியோ தான். பல 'முதல்' தகைமைகளைக் கொண்டவராக அவர் இருந்தார்.



முதலாவது தென் அமெரிக்க நாட்டவர். ஆர்ஜன்ரீனா தேசத்தவர் முதல் இயேசு சபை பாப்பரசர். முதலாம் பிரான்சிஸ் என்று பெயர் சூடிக் கொண்டவர் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

17.12.1936 இல் ஆர்ஜன்ரீனா தலைநகர் புவனஸ் அயர்சின் புளோரசில் பிறந்தவர். ஐந்து பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் தலைச்சன் இவர். இத்தாலியைச் சேர்ந்தவரும் முசோலினி ஆட்சியிலிருந்து தப்பிவந்தவருமான கணக்காளர் தந்தை ஜொசே போர்க்கொக்லியோவுக்கும், புவனஸ் அயர்சில் பிறந்த தாய் ரெஜினா மரியா சிவோரிக்கும் மகனாகக் கிடைத்தவர். ஆரம்பக் கல்வியை புனித டொன் பொஸ்கோ உருவாக்கிய சலேசியன் துறவறச் சபை பாடசாலையில் பெற்றுக்கொண்டார். இவர் பெற்றுக் கொண்ட அதிகூடிய தகைமை இரசாயன தொழிநுட்ப டிப்ளோமாவாகும். சில காலம் ஓர் ஆய்வு கூடத்தில் உணவுப்பிரிவில் ஆய்வுப் பணிகளைச் செய்துவந்தார். கொஞ்சக் காலம் தரையைக் கழுவித் துடைக்கும் பணியைக் கூட இவர் செய்திருந்தார். 21 ஆவது வயதில் ஏற்பட்ட மூன்று தட்டு நிமோனியா நோய்க்காளாகி ஒரு சுவாசப்பையின் இயக்கத்தையும் இழந்தார். மிலொங்கா என்கின்ற பாரம்பரிய இசையில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்.

இயேசு சபையில் சேருமுன்னம் புவனஸ் அயர்சிலுள்ள அமல உற்பவ அன்னை குரு மடத்தில் 3 ஆண்டுகள் பயின்றார். 1958 ஆம் ஆண்டு மார்ச் 11 இல் இயேசு சபை இளங்குருமட மாணவரானார். 1964 முதல் 1965 வரை அமல உற்பவ கல்லூரியில் இலக்கியம் மற்றும் உளவியல் பாடங்களைக் கற்பித்தார். தொடர்ந்து இயேசு சபை உருவாக்கலில் ஸ்பெயின் தேசத்தில் தனது பாப்பரசருக்கான விசுவாசம் தெரிவிக்கும் நான்காவது வார்த்தைப்பாட்டை 1973இல் எடுத்துக்கொண்டு. 1973 முதல் 1979 வரை இயேசு சபை மேலாளராகப் பணியாற்றினார். பின்னர் அயர்லாந்தில் பணியாற்றி ஆங்கிலமும் கற்றுக்கொண்டார். தமது சபையின் ஆன்மீக வழிகாட்டியாகவும், ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவராகவும் தமது சொந்த ஊரில் செயற்பட்டார்.

1992 இல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1998 இல் புவனஸ் அயர்சின் ஆயராகவும் நிலைப்படுத்தப்பட்டார். ஆயர் என்கின்ற நிலையில் பல உயர் பதவிகளை வகித்ததோடு பெரிய வியாழன் திருப்பலியின்போது சிறைப்பட்டோர், நோயாளிகள் ஆகியோரின் கால்களைக் கழுவி முத்தமிட்டு நாட்டின் கவனத்தைத் தன் பால் ஈர்த்துக் கொண்டார்.



திருச்சபையின் புதிய அறிமுக செயற்பாடுகளை எல்லாம் முதலில் அமுல் நடத்திக் காட்டுபவராக இவர் இருந்தார். 2001 பெப்ரவரி 21 இல் கர்தினாலாக பதவியுயர்வு பெற்றார். இதற்கிடையில் தமது நாட்டின் இராணுவ ஆட்சிக் காலத்தில் கொடுங்கோலர்க்கு துணை நின்றதாக இவர்மேல் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. அதிலிருந்தெல்லாம் வெற்றிகரமாக அவர் மீண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாப்பரசரானதும் அவரது பணிகள் மற்றும் அவர் வாழ்வு முறை எப்படிப்பட்டதாக அமைந்திருந்தது, இருக்கிறது என்று பார்த்தால் அது மலைப்புக்குரியதொன்றாகவும் முன்னெப்போதுமில்லாத வகையில் புதுமை படைத்ததாகவும் இருப்பதைக் காணலாம். முன்னர் சொல்லியபடி மக்களின் ஆசீர்வாதத்தைத் தன் பணிகளில் கோரி நின்ற முதல் பாப்பரசரே இவர்தான். முன்னம் தான் விட்டு விலகிய பணி மீண்டும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது அதை மறுக்காமல் ஏற்றுக்கொண்ட அவர், தன் முன்னாலுள்ள சவாலுள்ள பணிகளை நிறைவேற்ற மக்கள் ஆசீரை அவர் கோரி நின்றார். திருச்சபையில் பல குளறுபடிகள் இருந்தன. பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளால் திருச்சபை அதிர்ந்துகொண்டிருந்தது. வத்திக்கான் வங்கியில் பல நிதி மோசடிகள், ஊழல்கள். பல நாட்டுத் தலைவர்களின் கறுப்புப்பண வர்த்தகத்திற்கு உடந்தையாக இருந்தமை, தன்னினச் சேர்க்கைக்கும், ஓர்பால் இனத்தவரின் திருமணங்களுக்கும் உலக நாடுகளில் பெருகிவரும் ஆதரவு, நாடுகள் தோறும் மதங்களின் பேரால் நிகழ்ந்து வரும் கொடுமைகளும் அமைதியீனங்களும் பெரும் சவால்களாக எழுந்தன.

இத்தகைய சூழ்நிலையில், அன்று புனித பிரான்சிஸ் அசிசியார் கனவில் கண்டதுபோல இடிகின்ற கட்டிடமாகத் திருச்சபையை உணர்ந்து கொண்டதால்



தானோ என்னவோ அவர் பிரான்சிஸ் அசிசியாரின் பெயரைத் தனக்கான பாப்பு நாமமாகச் சூடிக் கொண்டு பொறுப்பைத் தோள் மேல் ஏற்றுக்கொண்டார். அன்று மறுத்திருந்த பொறுப்பை இன்று ஏற்றுக்கொண்டார்.

அவர்வழி இதன் முன்னம் இருந்த பாப்பரசர்களின் வழிபோல் இருக்கவில்லை. ஆடம்பரத்தை வெறுத்து வாழ்வில் எளிமைகாட்டும் பண்பு தொடர்ந்தது. முடியைப் புறக்கணித்தார், தங்க ஆபரணங்களை ஒறுத்து வெள்ளியை ஏற்றார். தான் முன்னர் பாவித்த திருச்சிலுவையையே தொடர்ந்தும் பாவிக்கலானார். பூசை உடைகளில் மிகுந்த எளிமையை விரும்புகிறவராக இருக்கிறார்.

பாப்பரசர்க்கான மாளிகையை விட்டுவிட்டு சாதாரண அலுவலக பங்களாவில் குடியேறினார்.



தனது உணவை வத்திக்கான் ஊழியர்கள் மற்றும் ஏனைய கர்தினால்களுடன் வழமைபோன்று பகிர்ந்துகொள்ளத் தொடங்கினார். ஏனெனில் அவர் வாழ்வு முழுவதும் தாழ்மையும் எளிமையும் குடிகொண்டிருந்தது. எந்தப் பிரச்சினையும் பேசித் தீர்க்கப்படவேண்டும், அவ்வாறு தீர்க்கப்பட முடியும் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டவராக இருந்தவர். இதனால் அனைத்துத் தரப்பு நம்பிக்கை, வழிமுறைகள் கொண்ட மக்கள் மத்தியில் இணைக்கும் பாலத்தை அமைக்கலாம் என்று கனவு கண்டவராக அவர் இருந்தவர். கர்தினாலாக இருந்தபோது திருச்சபையின் எந்தக் கொள்கைகளுக்காக முன்னின்று செயற்பட்டாரோ அவற்றிற்காக இப்போதும் வலிமையாகக் குரல் கொடுத்து வருகின்றவராக இருக்கின்றார். குறிப்பாக ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்தை ஏற்க முடியாதெனத் தெளிவாக இடித்துரைத்து அதை ஏற்க முன்வந்த மோல்டா ஆயரைத் தம்மோடு ஒப்புரவாக்கப்பண்ணினார். விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் புரிவோருக்கு திவ்விய நற்கருணை வழங்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றவர். பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுக்கும் அதே வேளையில், தன்னினச் சேர்க்கையாளர்கள், அவர்களது திருமணம் போன்றவற்றிற்கெதிரான திருச்சபையின் நிலைப்பாட்டில் விட்டுக் கொடுப்பு எதுவுமில்லை என்கின்றவராகவும், கருத்தடை, கருச்சிதைவு போன்றவை மட்டில் திருச்சபை இதுகாறும் கொண்டுள்ள கொள்கைகளை விட்டுக்கொடாதவராகவும் அவர் அமைகின்றார். தன்னை திருச்சபையின் மைந்தன் என்று கூறிக்கொள்ளும் அவர், 'திருச்சபையை ஏற்று அதன் படிப்பினைகளின்படி ஒழுகாத வரை ஒருவன் தன்னைத்தானே கிறீஸ்தவன் என்று அழைத்துக் கொள்வதெப்படி?' என்று உரக்க வினா வெழுப்பவும் செய்கின்றார். 'டுவிட்டர்' மற்றும் 'பேஸ் புக்' தொடர்பாடற் சாதனங்களை, சருவதேச வலையமைப்புக்களைப் பயன்படுத்தி, காலத்தோடு இணைந்து தன் மக்களுக்கு எளிமையான, மிகவும் சுலபமாக விளங்கக் கூடிய மொழியில் தனது படிப்பினைகளை வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்களை இறைமகன் கிறீஸ்துவின் பாதையில் வழி நடத்திக் கொண்டு வருகின்றவர் பாப்பரசர்



பிரான்சிஸ். ஏழைகள் தொடர்பான தனது ஆழ்ந்த கரிசனைகளை வெளிப்படையாகத் தெரிவித்து அவர்களுக்காகக் குரல் தர அவர் பின்வாங்குவதில்லை. வெளியிலுள்ள அவதானிகள் அவரது ஏழ்மையான, எளிமையான போக்கு குறித்து அவ்வப்போது அச்சம் தெரிவிக்கவும் தவறுவதில்லை. இவரது இந்த எளிமையான அமைதிப்போக்கு எதிர்வரும் காலத்தில் திருச்சபையின் தலைவர்களுக்கு என்ன மாதிரியான தலையிடியைக் கொண்டு வருமோ என்கின்ற கரிசனையில் திருச்சபைக்குள்ளிருக்கின்ற பழைமைவாதப் போக்குடையவர்களால் அவர் உயிருக்கே ஆபத்து வரலாம் என்பதுதான் அந்த அச்சம்.

தாம் பதவியைப் பொறுப்பேற்றதுமே வத்திக்கான் வங்கியின் குளறுபடிகள் குறித்து ஆராய விசாரணைக் குழுவொன்றை ஏற்படுத்தி அதன் சிபாரிசுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்று சூளுரைத்தபடி வங்கியில் பல மாறுதல்களை ஏற்படுத்தினார்.

அதுமட்டுமல்ல, ஓரிரு மாதங்களுக்கு முன்னம் வெளிநாட்டில் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்குள்ளான மூன்று குருக்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த ஏற்பாடும் செய்தார். இப்படியான நேர்மையான நடவடிக்கைகளாலும், தான் சொல்வதையே தன் வாழ்வில் கடைப்பிடிக்கின்ற ஒருவராகவும் அவர் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அவர்மீது நம்பிக்கை உலகளாவிய ரீதியில் அதிகரித்திருக்கின்றது. அவர் பதவியேற்றுக் கொண்ட காலத்திலிருந்து அவரைச் சந்தித்துவிட முண்டியடித்துக் கொண்டு வரும் உலகத் தலைவர்கள் இதற்கொரு உதாரணம்.



மக்களுடன் ஒருவராக, மக்களின் நாடித் துடிப்பை நன்கு அறிந்த ஒருவராக, மக்களுக்காக வாழும் அவர் பல்லாண்டு காலம் திருச்சபையின் தலைமைப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பது திருச்சபையை நேசிக்கின்றவர்களது ஆசையாகும். நிச்சயமாக இவரது காலத்திற்குள் திருச்சபை தலைநிமிர்ந்த சக்தியாக, விமரிசனங்களுக்கப்பாற்பட்டத் திருச்சபையாக மிளிரும் என்பது திண்ணம். ■



## துணுக்குச் செய்திகள்!

- இந்தியா தான் உலகிலேயே அதிகமான அடிமைகளைக் கொண்டுள்ள நாடு என உலக கொத்தடிமைகள் அமைப்பு கூறுகின்றது. உலகில் இன்று ஏறத்தாழ 3.60 கோடிப்பேர் அடிமைத்தளையில் வாழ்கின்றனர். உலக அடிமைமுறை ஒழிப்பு தினம் டிசம்பர் 2 அன்று கொண்டாடப்படுகின்றது.

- நிலக் கண்ணிவெடிகள் மற்றும் தடை செய்யப்பட்ட வெடிகளுக்குப் பலியானோரில் பாதிப்பேர் சிறுவர்கள் என்று கொலம்பிய அரசுசாரா அமைப்பான சி.சி.சி.எம் தெரிவித்துள்ளது.

- உலகெங்கிலும் சிசு உயிரிழப்புகளுக்கு குறைமாதப் பிரசவமே மிகப்பெரும் காரணியாக உள்ளதென இங்கிலாந்து மருத்துவர்கள் நடத்திய ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இந்தியாவில் ஏறத்தாழ 361,000 குழந்தைகள் குறைமாதப் பிரசவத்தின் பின்னர் ஏற்படும் உடல் நல பாதிப்பால் உயிரிழக்கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனின் சில நிமிடங்கள் ....

**இம்முறை தொண்டனின் சில நிமிடங்களிற்காக நாம் சந்திப்பது ஜோசப் நோமன் ஹரிசன் அவர்களை. மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த ஹரிசன் அவர்கள் சுமார் 29 அகவையான இளைஞர். வளர்ந்துவரும் இளம் பாடகரான இவர் M-Tracks என்னும் ஒலிப் பதிவு கூடத்தின் உரிமையாளரும் ஆவார்.**

**தம்பி ஹரிசன்பூ உங்கள் குடும்பம், இருப்பிடம் பற்றிச் சிறிது சொல்வீர்களா...?**

நான் நாவற்குடாப் பங்கைச் சேர்ந்தவன். எனது தகப்பனார் ஓய்வுபெற்ற கிராம சேவை அதிகாரி. தம்பிராஜா ஜோசப் என நன்கு அறியப்பட்ட அவர், பிரபல மான நாடகக் கலைஞர் ஆவார். எனக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரியும் உள்ளார்கள். எனது அண்ணா மேனன் அவர்களும் சிறப் பான பாடகர்.

**உங்களின் தொழில் பற்றி .....**

நான் இலங்கை வங்கியின் நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றுகின்றேன். கொழும்பு தலைமையகத்தின் வெளிநாட்டுப் பிரிவில்தான் என் பணி. எனவே, அபுதாபியில் உள்ள வங்கியொன்றில் இலங்கை வங்கியின் பிரதிநிதியாக மூன்று வருடங்கள் பணியாற்றியுள்ளேன். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழி களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தமையால் அவ்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

**உங்கள் கல்வி வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்களேன்.....**

முதலாம் தரம் தொடக்கம் க.பொ.த. உயர் தரம் வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலேயே படித்தேன். அதன்பின்னர் வங்கியில் இணைந்துகொண்டேன்.

**இசைத் துறையில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது...?**

நாவற்குடா லூர்த்து அன்னை ஆலயத்தில் 2000ம் ஆண்டு தொடக்கம் 'Keyboard' இசைக்கப்பழகி, இசைக்கத் தொடங்கினேன். 2001 தொடக்கம் 2009 வரை பாடகர் குழாம் பொறுப்பை ஏற்று நடாத்தினேன். 2004ம் ஆண்டில் 'கீதாரகாஸ்' என்னும் இளையோருக்கான இசைக்குழுவில் இணைந்து பணியாற்றினேன். தேவாலயப் பாடல்களையும் பாடத் தொடங்கினேன். பாடல்களை இயற்றிப் பாட வேண்டும் என்ற அவாவும், நாமே சொந்தமாக பாடல்கள் வெளியிட வேண்டும் என்ற அவாவும் என்னில் சுவாலைவிட்டு எரியத் தொடங்கின.

**உங்கள் ஒலிப்பதிவுக் கூடம் பற்றி ...?**

ஒலிப்பதிவுக்கூடம் ஆரம்பிக்கவேண்டும். என்பது என் கனவு. எல்லாரும் ஒத்துழைத்தனர். நான் அபுதாபியில் பெற்ற ஊதியமும் எனக்கு உதவியது. முதலீடு செய்தேன். இதற்கு எவ்வாறான பிரதிபலிப்பு கிடைக்கும் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எனக்கு இசையமைப்பாளர் ஜனனி, ஒலிப் பொறிஞர் தினேஷ் ஆகியோரினதும், ஏனையோரினதும் ஒத்தாசையுடன் பதிவுக்கூடம் நல்ல பெறுபேற்றைத் தர ஆரம்பித்துவிட்டது. எல்லாம் Team Work தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**சிரமத்தின் மத்தியில் முன்னேற வேண்டும்: மற்றவர்களையும் முன்னேற்ற வேண்டும்.**

**புதுப்பாடகர்களை எவ்வாறு மெருகூட்டுகின்றீர்கள் ....?**

அவர்களை நன்கு பயிற்றுவித்து மீண்டும் மீண்டும் பாடவைப்பேன். பின்னர் பாடல்களைப் பதிவு செய்வேன். புதுப் பாடகர், பாடகிகளை அறிமுகம் செய்துவைக்க ஆர்வமாய் உள்ளோம். விரும்பியவர்கள் M-Tracks, 246, பழைய கல்முனை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு என்னும் முகவரியில் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

ஒரு மாதத்திற்கோர் இசையமைப்பாளர், பாடகரை அறிமுகம் செய்ய ஆசை.

**இதுவரை எத்தனை பாடல்களுக்கு இசை வழங்கி ஒலிப்பதிவு செய்துள்ளீர்கள்...?**

சுமார் 50 பாடல்களுக்கு மேல் இசையமைத்து ஒலிப்பதிவு செய்துள்ளேன். 10 குறுந்திரைப் படங்களுக்கு இசையமைத்துள்ளேன். கடைசியாக கொன்ஸ்டன் கிஷான் அவர்களின் இயக்கத்தில் வெளியான 'சர்ப்பங்கள் தீண்டும் பிழைத்து வாழ்' என்னும் குறும்படம் தென்னிந்தியத் திரைப்படங்களுக்கு ஈடான ஒன்றாக காணப்படுகின்றது. அதில் வரும் "அடியே உள்ளூறுதடி...." என்னும் பாடல் மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்பாடல் வரிகளை எழுதி, இசையூட்டியவர் ஜனனி.

**உங்கள் இலட்சியம் என்ன?**

முழுவதும் மட்டக்களப்பின் பெருமைபாடும் 'மட்டுப்பாட்டு' என்னும் பாடலை வெளியிட வேண்டும். அத்துடன், 'தமிழ், தமிழன், தமிழ் மொழி' என்ற பாடல்....

**நீங்கள் வாசகர்கட்குக் கூற விரும்புவது என்ன....?**

சிரமத்தின் மத்தியில் முன்னேற வேண்டும்: மற்றவர்களையும் முன்னேற்ற வேண்டும்.

**தன்னுடைய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம், 'லூர்து அன்னையின் ஆசீர்வாதம்' என்று 'ஹரிசன்' பூரணமாக நம்புகின்றார். அதனால், எதிர்வரும் மார்ச் மாதம் எட்டுப் பாடல்கள் கொண்ட லூர்துமாதா பாடல்களையும் வெளியிட உத்தேசித்துள்ளார்.**

**ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்.** ●




குறும்(புப்)பா - 147

ஊரெல்லாம் கூட்டங்கள் பரபரப்பு
உறவுக்குள் வெடிப்பினால் நறநறப்பு
தேர்தல்கள் வந்தாலும் மோதல்கள் வந்தாலும்
திருத்தந்தை வருகிறார். இது வியப்பு!



- மலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அம்மா!

## கடுகுக்கதை – 62

– பற்றி –

அன்று ஒரு சனிக்கிழமை, காலை 5.30 மணியிருக்கும்: அன்ரனின் கடைசி மகன் – 5 வயது. அன்ரனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு படுத்திருந்தவன் காதுக்குள் மெல்ல குசுகுசுத்தான்.

"அப்பா ...... அப்பா ......"

"என்னப்பு ......"

"இண்டைக்கு நத்தார் வருசத்துக்கு உடுப்பு வாங்க கடைக்குப் போறதானே....?"

"ஓம்"

"அப்பண்டா..... அப்பம்மாவிற்கும் உடுப்பு வாங்கித் தாங்க .... பொங்கலுக்கு அவவ பார்க்க ஊருக்குப் போகனும்....."

அன்ரனுக்கு அதிர்ச்சியாகப் போயிற்று....

அன்ரன் சுத்தமான சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; ஆனால், மதம் மாறி காதல் திருமணம் செய்து கொண்டவர்; திருமணத்தோடு தாயை விட்டுப் பிரிந்தவர், இன்னும் போய்ப் பார்க்கவில்லை.


"ஏன் மகன் அப்படிச் சொல்றீங்க...."

"அப்போய்! நம்மட அம்மா எங்களையும் பார்த்து, உங்களையும் பார்த்து, வேலைக்கும் போறவ ..... எவ்வளவு கஷ்டப்படுறா.... இப்பிடித்தானே உங்கட அம்மாவும் உங்கள வளர்த்திருப்பா ....."

அன்ரனால் எதுவும் பேச இயலவில்லை.

"சரி ..... போவம் ....."

## 'பார்சி' மொழியில் விவிலியம்!




பாரசீக நாட்டில் இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தப்படும் பார்சி என்ற மொழியில் விவிலியம் மொழிபெயர்க்கப்பட்டு அண்மையில் இலண்டன் மாநகரில் வெளியிடப்பட்டது. இந்த விவிலிய மொழிபெயர்ப்பின் மூன்று இலட்சம் பிரதிகள் அடுத்த மூன்று ஆண்டுகளில் ஈரான் நாட்டிற்கும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்படும் என்று சொல்லப்படுகிறது.

## ஒரு நாட்டின் கலாசாரத்தின் அளவுகோல்



அமைதியின் அடிப்படையிலான ஒரு கலாசாரத்தைக் கட்டியெழுப்ப முதல் உலகப் போர் நமக்குப் பாடங்களை கற்றுத் தருகிறது என்றும் நலிந்தவர்களைப் பேணுவதில் காட்டப்படும் அக்கறையே ஒரு நாட்டின் கலாசாரம் எவ்வளவு உயர்ந்துள்ளது என்பதன் அளவுகோல் என்றும் கர்தினால் பியத்ரோ பரோலின் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வியாதிகளைக் குணமாக்கும் வீட்டு மருத்துவம்

உலக வாழ்வுக்கு உடல் வேண்டும். வாழ்வைக் காப்பாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் தம் உடலைக் காப்பாற்ற வேண்டும். உடலைக் காப்பாற்றுதல் என்றால் என்ன? உடலில் ஆரோக்கியம் குன்றாமலும் நோய்த்தாக்கங்களுக்கு உட்படாமலும் பாதுகாத்தல். அதற்கு அளவான சத்துள்ள எளிய உணவுகள், அளவான வேலை அல்லது உடற்பயிற்சி போன்றவை தேவை. அத்துடன் மிக முக்கியமானது மனம். நமக்கு ஏற்படும் பெரும்பாலான நோய்களுக்கு மனமே காரணம் என்பதுதான் மருத்துவர்களும் ஆய்வாளர்களும் கூறும் உண்மை. மன நெருக்கீடுகள், பரபரப்பு, அளவுக்கு மீறிய கவலை, அச்சம், குற்ற உணர்வுகள் போன்றவைதான் பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பரபரப்பும், அவசரமும், வேகமும் நிறைந்த இன்றைய வாழ்க்கை முறையில் மன உளைவுகளுக்கும், அதன் விளைவாக ஏற்படும் நோய்களுக்கும் குறைவில்லை. அது போதாதென்று, வணிக நோக்கோடு உருவாக்கப்படும் நவீன உணவுகளும், பழக்க வழக்கங்களும் நமது உடலை அணுவணுவாக அரித்து அழித்து விடுகின்றன. புதிய புதிய நோய்கள் அதற்குத் தீர்வாக புதிய புதிய மருந்துகள். வணிகம் கொடிகட்டிப் பறக்கிறது. நமது ஆரோக்கியம் தொலைந்து போகிறது. அங்கு, இங்கு, எங்கோ, எப்போதோ என்று தோன்றிய நோய்கள் எல்லாம் இன்று வீட்டுக்கு வீடு காணப்படுகின்றன. நவீன வாழ்க்கை முறை நம்மை நோய்களோடு வாழ நிர்ப்பந்தித்துள்ளது.

நமது மரபுகளும் மதங்களும் உடலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போற்றவும் நமக்குக் கற்றுத் தருகின்றன. உடல் புனிதமானது. அது கடவுள் வாழும் கோயில் என்றும் எங்கும் நிறைந்த கடவுள் எனப்படும் மகா சக்தி நமது உடலுக்குள்ளும் உயிராக உறைந்துள்ளது என்றும் கூறுகின்றன.

உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம் என்றும்

**உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
என்றெல்லாம் அவை போதிக்கின்றன.

ஆனால், நாம் தான் இவைகளைக் கேட்டும் படித்தும் கருத்தில்கொள்வதில்லை. கவனத்தில் எடுப்பதுமில்லை. அளவுக்குமீறி 'காசு' களைத் தேடி ஓடி உழைத்து மனதையும், உடலையும் மாசுபடுத்திக் கொள்கின்றோம். பின் அதே காசை ஊசிகளுக்கும், மருந்துகளுக்கும் மாத்திரைகளுக்கும் கொட்டி அழுகிறோம். இதனால், பணச் செலவுகள், பக்க விளைவுகள், நோய்கள் நமது உடலிலே நிரந்தரமாகக் கூடாரம் அடித்துவிடுகின்றன. நம்மிடம் கல்வி இருக்கிறதோ, தொழில் இருக்கிறதோ, பொருள் இருக்கிறதோ என்னவோ, ஒவ்வொருவருக்கும் நோய்கள் இருக்கின்றன. நமக்கென்று மருத்துவர்களும் இருக்கிறார்கள். இதுவும் ஒரு வகை அடிமைத்தனந்தான். இவற்றிலிருந்து நாம் விடுபடுவது எப்போது? விடுதலை பெறுவது எப்போது? இதற்கு ஒரு மனமாற்றம் தேவை!

**நுகர்வுக் கலாசார உலகில் சிந்தனைக்கு.....**

ஒருவனின் சிறு சிறு தேவையற்ற செலவுகள்தான் ஒருவனின் அழிவுக்கு வழிகோலுகின்றன. எனவேதான் பிராங்ளின் "தேவையற்ற சாமான்கள் வாங்கும் வழக்கமானது, முடிவில் ஒருவனை தேவையுள்ள சாமான்களை விற்கும் நிலையில் கொண்டுவந்து விடுகிறது" என்று கூறினார்.

"இந்தப் பயித்தியத்திலிருந்து அவர்கள் எப்பொழுது தெளிவு பெறுகிறார்களோ அப்பொழுதே அவர்கள் வீழ்ச்சிப் பகுதியில் விழாமல் தப்பிவிட்டார்கள் என்று நான் கூறுவேன்" என்கிறார் பிராங்கிளின்.

நமது சிந்தனை முறைகளை, உணவு முறைகளை, பழக்க வழக்கங்களை, வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொள்வதுதான் விடுதலைக்கான வழி.

நாம் அன்றாடம் பாவிக்கும் அல்லது பாவிக்க வேண்டிய பொருட்களே உணவாகவும் - மருந்தாகவும் விளங்குகின்றன.

மஞ்சள்:

இதனை சமையலில் உபயோகிப்பதால் நிறமும் அழகும் துலங்கும். இது ஒரு சிறந்த கிருமிநாசினி. முன்பெல்லாம் வீடுகளுக்குள், முற்றங்களில் எல்லாம் மஞ்சள் நீர் தெளிப்பார்கள். பெண்களும் தினமும் குளிக்கும் போது மஞ்சள் பூசுவார்கள். இப்போது திராவகங்களும், கிறீம்களும், பேசியல்களும் வந்து மஞ்சள் தெளிப்பும் பூச்சும் அருகிப்போய்விட்டது.


மஞ்சள் இரத்த சுத்தி உண்டாக்கும். அடிபட்ட நோவுகளுக்கு வீக்கங்களுக்கு மஞ்சளை நல்லெண்ணையில் சிறிது சூடாக்கி பூசினால் வீக்கம், நோவு குறைந்துவிடும். மஞ்சளின் மருத்துவ குணத்தை அறிந்து நம் முன்னோர்கள் அதனை உணவாகவும், மருந்தாகவும், மங்கலப் பொருளாகவும், நிறமாகவும் கருதினர்.

மஞ்சள் நிறமே வருக!
மங்கலப் பொருளே வருக!
**இது கவிஞர் கண்ணதாசன் பாட்டு.**

**- ஆனந்தசித்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## தை — 2015

— மற்றில்டா இராஜேந்திரம் —

### தை 2ம் திகதி : புனித பசிலும் கிரகறியும் :



திருச்சபையின் நாட்காட்டியானது ஒரே நாளில் இந்த இரு மாபெரும் கலாநிதிக ளையும் கௌர வப்படுத்துகிறது. புனித பசில் செசரியா கப்படோசியாவில் 330ம் வருடத்தில் பிறந்தார். இவரது பெற்றோரும், சகோதர சகோதரிகளும் புனிதராகவே இவரை மதித்தனர். செசரியாவில் அமைந்த பாடசாலையில் கல்வி கற்றார். அத்துடன் கொன்ஸ் தாந்துநோபிள், ஏதென்ஸ் ஆகிய இடங்களிலும் கற்றபோதுதான் கிரகறி இவருக்கு அறிமுகமானார். சிறிது காலத்தின் பின் செசரியாவில் ஒரு பாடசாலையை சட்டப் பயிற்சிக்காக உருவாக் கினார். இறுதியில் இவர் துறவியாகத் தீர்மானித்தார். ஐந்து வருடங்களாகப் போண்டுஸ் எனுமிடத்தில் பராமரித்து வந்த துறவற இல்லத்தை இதற்கெனத் தெரிந்துகொண்டார். 370ம் வருடம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின் ஆயரானார். இறக்கும் வரை கற்றலில் ஈடுபட்டார். இயற் கையான சொல் வன்மையால் மகா பசில் எனும் பெயர் பெற்றார். மரணிக்கும் காலத்தில் திருச் சபையின் கலாநிதிப் பட்டத்தையும் அடைந்தார்.

கிரகெறி ஏரியன்செனில் புனிதர்களான பெற்றோருக்குப் பிறந்தார். செசரியா, அலெக்சாந்திரியா, ஏதென்சில் கல்வி கற்றார். ஏதென்சில் பசில், யூலியன் ஆகியோரைச் சந்தித்தார். 358ம் வருடம் திருமுழுக்குப் பெற்றுப் பரிசுத்த வாழ்வு வாழ்ந்தார். பசிலுடன் இணைந்து துறவறம் மேற்கொண்டார். குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பசில் ஆயரானபோது 372ம் வருடம் சேசிமா மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். தனிமையான இடத்தில் அமைதியாக வாழவிரும்பிய இவரைப் பல காரணிகள் அங்கிருந்து துரத்தின. 379ம் வருடம் கொன்ஸ்தாந்து நோபிளின் ஆயரானார். 381ம் வருடம் வரை பணிபுரிந்த அவர் பின் அப்பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு தனது அமைதியான தனியிடத்திற்குத் திரும்பினார். 389ம் வருடம் மரணிக்கும் வரை அங்கேயே வாழ்ந்தார். இவரது இறையியல் அறிவுமிக்க சொல்வன்மை இவரைக் கிரேக்கத் திருச்சபையின் மாபெரும் கலாநிதிகளுள் ஒருவ ராக்கியது.

### தை 3ந் திகதி : புனிதையான ஜெனிவிவ்



பரிஸ் நகர நன்டேரே எனுமிடத்தில் 422ம் வருடம் இவர் ஜெனித்தார். ஏழு வயதானபோது பெலஜியசின் சமய எதிர்ப்புக் கெதிராகப் போராட பெரிய பிரித்தானியா செல்லும் வழியில் ஆயரான ஜேர்மின் (புனிதர்) இவரது கிராமத்திற்கு வந்தார். பனி மூட்டத்தின் நடுவே கடவுளின் தூதரது பாதுகாப்பில் ஒரு குழந்தை நின்றிருந்த தைக் கண்டார். அக்குழந்தை எதிர்காலத் தில் புனித வாழ்வு வாழ்வார் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். அவர் அக்குழந்தையை அணுகி அவளது விருப்பத்துடன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று, அவரைப் புனிதமானவளாக வாழ இறைவனுக்கு அர்ப்பணித்தார். அட்டிலா படையுடன் பரிஸ் நகர் நோக்கிச் செல்கை யில் நகரில் இருந்தோர் தமது இல்லங்களை விட்டு ஓட முற்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்தித் தன் உண்ணா நோன்பாலும், செபத்தாலும் விண்ணகத்திலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தார். ஏதோ முன்பே எதிர்வுகூறப்பட்டது போன்று பாபேரியர்க் கெதிரான படையெடுப்பு திடீரென நிறுத்தப்பட்டது. புனிதையான ஜெனிவிவின் வாழ்வு செப, தவங்களால் நிறைந்து பணிவாழ்வாக இருந்தது. 512ம் வருடம் இவர் இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 15.02.2015

# விவிலியம் கற்போம் – 139

அன்பார்ந்த சிறுவர்களே!

திருவிவிலிய அறிவை உங்கள் மத்தியில் பரப்ப நாம் **'விவிலியம் கற்போம்'** என்ற பக்கத்தை உருவாக்கினோம். இனி அதன் வடிவம் மாற்றம் பெற்று உங்களிடம் வருகிறது. முயற்சி செய்யுங்கள். வெற்றி பெற வாழ்த்துகள்!

## யோசுவா – 21ம், 22ம் அதிகாரங்கள்
## (சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. லேவியர் தலைவர்கள், எலயாசரையும், யோசுவாவையும், இஸ்ரயேல் மக்களின் தலைவர்களையும் அணுகி, சீலோவாவில் "நாங்கள் வாழ நகர்களையும், எங்கள் ........................... மேய நிலங்களையும் கொடுக்க ஆண்டவர் மோசே வழியாகக் கட்டளையிட்டார்" என்றனர்.

அ) ஆட்டு மந்தைகள் ஆ) ஆடு மாடுகள் இ) கால்நடைகள்

2. ........................... மக்களுக்குரிய நிலப்பகுதியில் லேவியருக்கு ஆங்காங்கே விடப்பட்டவை நாற்பத்தெட்டு நகர்களும் அவற்றின் மேய்ச்சல் நிலங்களும் ஆகும்.

அ) இஸ்ரயேல் ஆ) லேவியர் இ) சீலோ

3. ஆண்டவர் இவ்வாறு அவர்கள் மூதாதையருக்குக் கொடுப்பதாக வாக்களித்த நாடு முழுவதையும் இஸ்ரயேலருக்குக் கொடுக்க அவர்கள் அதில் ...........................

அ) ஆடுகள் மேய்த்தார்கள் ஆ) வாழ்ந்தார்கள் இ) பயிர் செய்தார்கள்

4. யோசுவா ரூபன் குலத்தாரையும், காத்து குலத்தாரையும் ........................... குலத்தாரையும் அழைத்து "நீங்கள் மோசே கட்டளையிட்டவற்றுக்குக் கீழ்ப்படிந்தீர்கள்" என்றார்.

அ) மனாசேயின் ஆ) கோகாத்தியரின் இ) மெராரியின்

5. அவர்கட்கு வாக்களித்தபடி இப்போது ........................... காலத்தை அளித்துள்ளார். இப்போது உங்கள் கூடாரங்களுக்கு, யோர்தானுக்கு அப்பால் மோசே வழங்கிய பகுதிக்குச் செல்லுங்கள்.

அ) நீதியான ஆ) அமைதியான இ) பாதுகாப்பான

6. உங்கள் முழு இதயத்துடனும், முழு உள்ளத்துடனும் கடவுள் மீது அன்பு கூருமாறும், அவரது வழிகளில் நடக்குமாறும், அவரது ........................... கைக்கொள்ளுமாறும் மோசே கூறியவற்றை நிறைவேற்றுவதில் கவனமாயிருங்கள்.

அ) கற்பனைகளை ஆ) கட்டளைகளை இ) விதிகளை

7. ..........................., காத், மனாசே ஆகியோரின் குலத்தோர் இஸ்ரயேல் மக்களுக்கு அண்மையில் ஒரு பீடம் அமைத்ததை இஸ்ரயேல் மக்கள் பேரவை அறிந்து, அவர்களுடன் சண்டையிட சீலோவில் கூடியது.

அ) யோசுவா ஆ) மோசே இ) ரூபன்

8. பினகாசும் இன்னும் பதின்மரும் பலிபீடம் அமைத்தவர்களுடன் பேசச் சென்று, "நீங்கள் ........................... எழுப்பியதால் ஆண்டவரை விட்டு விலகிவிட்டீர்கள். நாளை கடவுள் எம்மீது சினம் கொள்வார். இதைவிட்டு வந்து எங்கள் நடுவில் தங்குங்கள்" என்றனர்.

அ) கட்டிடம் ஆ) ஆலயம் இ) பலிபீடம்

9. அவர்கள் "நாங்கள் ஆண்டவரை விட்டு விலகவா இதனை அமைத்தோம். ........................... பற்றிய அச்சத்தினாலேதான் செய்தோம். நமக்கென இது தேவை என்பதாலேயே செய்தோம்" என்றனர்.

அ) எதிர்காலம் ஆ) நிகழ்காலம் இ) இறந்தகாலம்

10. பினகாசு அவர்களிடம் "........................... நம் நடுவில் உள்ளார் என இன்று அறிந்தோம்" என்று கூறி விடைபெற்று, மீண்டும் வந்து விபரங்களைக் கூற அது நலமென எல்லோரும் ஏற்றுப் பலி பீடத்திற்குக் 'கிலயாது' எனப் பெயரிட்டனர்.

அ) மோசே ஆ) ஆபிரகாம் இ) ஆண்டவர்

(வினாப்பத்திரத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 139

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கடைசியாக ஆண்ட மன்னன்
(செகராசசேகரன் - பரராசசேகரன் - எல்லாளன்)

2. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்காக பொதுநலவமைப்பு நாடுகளால் 1950இல் வகுக்கப்பட்ட உதவித்திட்டத்தின் பெயர்?
(சியாட்டோ தாபனம் - கொழும்புத் திட்டம் - மார்ஷல் திட்டம்)

3. கோள்களின் சுழற்சி விதிகளைக் கண்டறிந்தவர்
(பிங்கேட்டன் - லாப்பிளாஸ் - கெப்ளர்)

4. இலங்கையில் இலக்கியத் திறனாய்வு முயற்சிகளுக்கு வித்திட்ட முன்னோடியாகக் கருதப்படுபவர்?
(பேராசிரியர் கைலாசபதி - பேராசிரியர் கா. சிவத்தம்பி - பேராசிரியர் சு. வித்தியானந்தன்)

5. இன்று பரவலாகக் காணப்படும் நீரிழிவு நோயைக் கண்டுபிடித்தவர்,
(கோல்ப் - பேண்டிக் கெஸட் - ஜேம்ஸ் சிம்ப்சன்)

6. 'தேடாச் செல்வம்' எனும் சொல்லில் வரும் 'தேடா' என்பது,
(வினையெச்சம் - பெயரெச்சம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

தொ.பே.இல. ..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 139**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 137 விடைகள்

யோசுவா, நாடெங்கும், ஏழு, யோர்தானுக்கு, திருவுளச்சீட்டு, எரிகோவில், அந்தராத்து அதாரை, இரபாயிம், அதும்மிம், பென்யமீன்

## அறிவை வளர்ப்போம் - 137 விடைகள்

1. சிறிமாவோ பண்டாரநாயக்கா 2. சவூதி அரேபியா 3. பூபாளம்
4. 300,000 5. குறைவற்ற செல்வம் 6. இடவாகுபெயர்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்

- அ. ஜேம்ஸ் கைலேஸ்
35/3 , பெரிய உப்போடை,
மட்டக்களப்பு.
- டானியா கைடிபொன்கலன்
24/11, 1ம் குறுக்கு,
செல்வநாயகம் வீதி,
மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்

- ஆன் நிலோஜினி விமலா,
கல்குடா வீதி,
பேத்தாழை,
வாழைச்சேனை.
- ஏ. கேஷான்,
23, புதிய வீதி,
கோட்டைமுனை,
மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 88 முடிவுகள்**

- முதலாம் பரிசு - 400/=
K. சப்திகா
இல. 145, 8ம் குறுக்கு,
திராய்மடு,
மட்டக்களப்பு.
- இரண்டாம் பரிசு - 300/=
R. தர்மிதா,
இல. 614, கோரியடி வீதி,
முகத்துவாரம்,
மட்டக்களப்பு.
- மூன்றாம் பரிசு - 200/=
க. அபிநயா
8ம் குறுக்கு,
திராய்மடு,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org